
# புதுஊற்று



புலம்பெயர்வோர்

ஓவியம்: ராஜா

**சஞ்சிகைக் குழு**

இணைப்பாளரும் நெறிப்படுத்துனரும்
திரு. சுந்தரம் டிவகலாலா S.L.A.S.
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

**குழுவில்**

திரு. எஸ். கிருஸ்ணானந்தன் S.L.Acc.S.
பிரதம கணக்காளர்

திரு. எஸ். அருளானந்தம் S.L.E.A.S.
மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர்

திரு. ஏ.ரி. சந்திரதாச S.L.E.A.S.
பிராந்திய கல்விப் பணிப்பாளர்

திரு. டி.பீ.ரீ. ஆரியசேன S.L.E.A.S
மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர்

திரு. எம்.பீ.எச். மொகமட் S.L.E.A.S.
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

திரு. எஸ். வரதசீலன் S.L.E.A.S.
உதவிக் கல்விப் பணிப்பாளர்

திரு. ஏ. ஹேரத் குலசூரிய S.L.E.A.S.
உதவிக் கல்விப் பணிப்பாளர்

திரு. பீ. பேராசிரியன் S.L.Eng.S.
பாடசாலை வேலைகள் எந்திரி

திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்
பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளர்

திரு. ஏ.எஸ். குணரட்ணம்
விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர்

திரு. பீ. திருமுகம்
உடற்கல்வி உதவிப் பணிப்பாளர்

ஜனாப். எம். முஸ்தபா
அதிபர்

திரு. எஸ். சுந்தரலிங்கம்
திட்டச் செயற்படுத்துகை உத்தியோகத்தர்

**கணனி எழுத்தமைப்பு**

திருமதி. சரஸ்வதி ஜெகநாதன்
செல்வி. லதா ஆறுமுகம்

**பக்க வடிவமைப்பு**

செல்வி. பத்மலோஜினி பத்மநாதன்

**கணிப்பொறி ஒழுங்கமைப்பு**

திரு. பீ.ஏ. கிறிஸ்ரி

**பிரதியாக்கத்துணை**

செல்வி. பிரகாஷினி இந்திரகுமார்
செல்வி. கேதீஸ்வரி செல்லையா

**அச்சுப் படியெடுப்பு**

திரு. ஆ. சதீஸ்குமார்

**ஆசிரியர்**

எம்.ஐ.ஏ. ஜபார்

# "புது ஊற்று"

கல்வி மற்றும் பல்துறைக் காலாண்டிதழ்

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணம்

## உள்ளடக்கம்



| | |
|---|---|
| ஆசிச்செய்தி - கௌரவ ரிச்சர்ட் பத்திரண | - கல்வி, உயர்கல்வி அமைச்சர் |
| ஆசிச்செய்தி - கௌரவ காமினி பொன்சேகா | - ஆளுநர், வடக்கு-கிழக்கு மாகாணம் |
| ஆசிச்செய்தி - திரு. ஜி. கிருஸ்ணமூர்த்தி | - தலைமைச் செயலாளர், வ.கி.மா |
| ஆசிச்செய்தி - திரு. சுந்தரம் டிவகலாலா | - செயலாளர், கல்வி அமைச்சு |
| கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் தமிழ் கற்பித்தல் | - பேராசிரியர், கா. சிவத்தம்பி |
| தமிழர்களின் உயர்கல்வி அண்மைக்காலப்போக்குகள் | - பேராசிரியர், சோ. சந்திரசேகரம் |
| செயன்முறைக்கல்வியின் அவசியம் | - செல்வி. திலகவதி பெரியதம்பி |
| ஆசிரியர் மனஅழுத்தமும் மனவேதனையும் | - திரு. மா. கருணாநிதி |
| திருகோணமலை மாவட்டத்தின் கல்வி நிலை | - திரு. கே. திலகரட்ணம் |
| தயவு செய்து கவனியுங்கள் | - சு. வில்வரெத்தினம் |
| விசேட மாணவர்களின் கற்றற் செயற்பாடு | - திரு. த. விவேகானந்தன் |
| தனியார் ரியூசன் கல்வி | - திரு. கே.எஸ். கஜேந்திரன் |
| நேர்காணல் | |

புது ஊற்று

கல்வி மற்றும் பல்துறைக் காலாண்டிதழ்

ஜூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் - 1996

"மெல்லெனப் பாயும் ஓடை கல்லையும் உருட்டிப் பாயும்"

## புதிதாய் ஊற்றெடுத்து

நடைமுறையில் உள்ள கல்வி அமைப்பிற்குட்பட்டு செயற்பட முடிந்த ஏராளமான விடயங்களை நாம் கவனத்திற்கெடுத்துக் கொள்வதில்லை. வெறுமனே மாணவர்களை பரீட்சை எழுதக்கூடியவர்களாக அல்லது பரீட்சைக்கு முகங்கொடுக்கக் கூடியவர்களாக மட்டுமே தயார்படுத்தி வருகிறோம். பாடசாலையைப் பொறுத்தவரையில் அவை சமூக உருவாக்கத்தை மேற்கொள்ளும் முகவர் நிலையங்களாகவே நவீன கல்வியாளர்களால் கருதப்பட்டு வருகிறது.

ஆகவே சமூகத்திலிருந்து பாடசாலைக்குள் நுழைகிற மாணவர்களை பூரண மனிதர்களாக அல்லது பூரண மனிதர்களாகக்கூடியவர்களாக மீண்டும் சமூகத்திற்கு அனுப்பி வைப்பதாகவே பாடசாலையின் கடப்பாடு அமைய வேண்டும். ஆகவே பரீட்சைகள் தவிர பாடவிதானங்களுக்கு மேலதிகமாக கலை, இலக்கியம், அறிவியல் மற்றும் நவீன விடயங்கள் என அறிய நிறைய இருக்கிறது. வகுப்பறையில் அல்லது பரீட்சை மண்டபத்தில் ஒரு புதிய கோட்பாட்டை அல்லது உத்தியைக் கண்டு பிடிப்பவனை நாம் கண்டு கொள்வதில்லை. வினாத்தாளில் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியான விடை எழுதுபவனையே நாம் திறமைசாலியாகக் கணக்கெடுக்கிறோம்.

இந்தப் பக்கத்திற்காக நான் எழுதத் தொடங்குகிறபோது தற்போது பாவனையிலிருக்கும் குளோரோபுளோரோ காபன்களை வெளியிடும் குளிரூட்டிகளும் குளிர்சாதனப் பெட்டிகளும் 1999 டிசம்பர் 31 உடன் பாவனையிலிருந்து அகற்றப்படும் என்ற உலகளாவிய அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. இந்த அறிவிப்பு எத்தனை பேரின் செவிகளுக்கு எட்டி இருக்கும் என்பது நமக்குத் தெரியாது. ஒன்று மட்டும் உண்மை. பாரதூரமான உலக விவகாரங்களில் சாதாரண பிரஜையின் அக்கறையும் அறிவும் குறைந்த நிலையில் இருக்கின்றது என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாகவேண்டும்.

இதன் காரணமாக நாம் நிறைய விடயங்களில் இருந்து வெகுதூரத்தில் இருக்கிறோம். துரதிஷ்டவசமாக நமது அறிவுர்தியான வழிகாட்டிகளும் இவ்விடயங்களில் தேக்கமுற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இத்தேக்கத்திலிருந்து விடுபடுவதே உடனடித்தேவையாகும். நமது கல்வியலாளர்களும் ஆசிரியர்களும் கல்வித்துறை முகாமையாளர்களும் இதுபற்றி சிந்திக்க வேண்டும்.

- ஆசிரியர் -

## மாண்புமிகு கல்வி, உயர் கல்வி அமைச்சர்
## கௌரவ ரிச்சர்ட் பத்திரண அவர்களின்

# ஆசிச் செய்தி

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் காலாண்டு வெளியீடான "புது ஊற்று" பல்துறை சஞ்சிகையின் முதல்வருகை மகிழ்ச்சியூட்டுவதாயுள்ளது. இச்சஞ்சிகையின் தொடர்ச்சியான வருகையில்தான் இதன் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதிலான வெற்றி தங்கியுள்ளது.

தகவலூடகங்கள் மனித உறவுகளுக்கும் அவர்களிடையேயான கருத்துப்பரிமாற்றங்களுக்குமான பாலம் என வர்ணிக்கப்படுகின்றது. கல்வித்துறையைப் பொறுத்தவரையில் இவ் ஊடகங்கள் பல்துறை தொடர்பான அறிவையும் வழங்க வல்லதாய் அமையவேண்டும். அந்தவகையில் "புது ஊற்று" சஞ்சிகை குறிப்பாக கல்வித்துறை சார்ந்த வழிகாட்டுனர்களுக்கு முன்னோடியாக அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

ரிச்சர்ட் பத்திரண
கல்வி, உயர்கல்வி அமைச்சர்
கல்வி, உயர்கல்வி அமைச்சு
"இசுருபாய"
பத்தரமுல்ல

**வடக்கு - கிழக்கு மாகாண**
**ஆளுநர்**

## கௌரவ காமினி பொன்சேகா அவர்களின்

## ஆசிச் செய்தி

அடுத்த நூற்றாண்டு தகவல் யுகமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. எனவே இருபத்தோராம் நூற்றாண்டுக் கல்வியானது பெரும்பாலும் வகுப்பறை, விரிவுரை மண்டபங்களோடு குறுகிவிடப் போவதில்லை. தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு கணிசமான அளவு அதிகரிக்கப்போகிறது என்பதே உண்மை. அந்த வகையில் ஒரு நல்ல சஞ்சிகையின் பங்களிப்பை நாம் மறுப்பதற்கில்லை.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் கல்வி மற்றும் பல்துறை சஞ்சிகையொன்று வெளிவருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். கல்வி, பண்பாடு, விளையாட்டு, ஆய்வு, கண்டுபிடிப்பு, சுயமுகாமைத்துவம், வேறு நவீன விடயங்கள் போன்ற துறைகளில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் மற்றும் கல்வித் துறையோடு தொடர்புடையவர்களையும் இலக்காகக் கொண்டு அவர்களுக்கான அறிவூட்டல் நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லும் "புது ஊற்று" சஞ்சிகையின் முயற்சி வெற்றிகரமாகத் தொடரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**காமினி பொன்சேகா**
ஆளுநர்
வடக்கு - கிழக்கு மாகாணம்
ஆளுநரின் செயலகம்
திருகோணமலை

## வடக்கு- கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் திரு.ஜி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழங்கும்

# ஆசிச் செய்தி

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு "புது ஊற்று" என்ற காலாண்டு வெளியீட்டு வைப்பதனையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இச் சஞ்சிகையின் முதலாவது இதழ் எவ்வளவு ஆர்வத்துடன் வெளியிடப்படுகின்றதோ அதே அளவு ஆர்வத்துடன் ஏனைய இதழ்களும் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே எமது எதிர்பார்க்கையாகும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிரதேசங்களுக்கிடையே தொடர்புப் பிணைப்புக்கள் வலுவிழந்துபோயுள்ளன. கருத்துத் தொடர்புகளும் செய்திப்பரிமாற்றங்களும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. இவ்வாறான ஒரு காலகட்டத்தில் வித்தியா என்ற சஞ்சிகையின் தோற்றப்பாடு விதந்து போற்றற்குரியதொன்றாகும். குறிப்பாகக் கல்வித்துறை சார்ந்த நவீன கோட்பாடுகள் மாகாணம் எங்கனும் வியாபிப்பதற்குப் பதிலாக முடங்கிய நிலையிலுள்ளன. கல்வி முகாமைத்துவத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட வேண்டிய தேவைகள் எழுந்துள்ளன. போர் முனைப்புகளினால் இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களையும் மாணவர்களையும் மீண்டும் ஒருங்கிணைத்துச் சிதைவுற்றுப் போயிருக்கும் எமது மாகாணத்தின் கல்வித் தரத்தினை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய பெரும் பணி எம்மை எதிர்நோக்கியுள்ளது.

இவ்வாறான பாரிய பணிகளைத் தனியே சட்டதிட்டங்களாலோ அல்லது பணத்தாலோ மட்டுமே நிறைவேற்றிவிட முடியாது. ஒழுங்கான கருத்துப் பரிமாற்றத்தின் மூலமே இவ்வாறான தடைகளை நாம் தாண்டி நிற்க முடியும். பாரிய பொறுப்புக்களைச் செவ்வனே ஆற்றுவதில் "புது ஊற்று" நிதானமாகச் செயற்பட வேண்டும். அமைச்சுக் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் அறியத்தருவது மட்டுமன்றி பிராந்தியங்களின் கல்வித்துறைசார் எதிர்பார்ப்புக்களையும் அது பிரதிபலிக்க வேண்டும். இவ்வாறான முயற்சிகள் அமைச்சு மட்டத்தில் மட்டுமன்றி மாகாண,பிராந்திய,பாடசாலை மட்டத்தில் கூட ஆரம்பிக்கப்படுதல் வரவேற்கப்பட வேண்டியதாகும். மாணவர்களின் கல்வித் தரத்தினையும் மொழி ஆற்றலையும் வளப்படுத்தும் வகையில் கையெழுத்துச் சஞ்சிகைகளை வெளியிட்டு அவற்றைப் பிராந்தியங்களிடையே பரிமாற்றம் செய்ய வேண்டும். இவ்வகையான முயற்சிகளுக்கெல்லாம் "புது ஊற்று" அடித்தளம் அமைத்துக் கொடுக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். "புது ஊற்று" என்ற காலாண்டு சஞ்சிகை காலம் தவறாது வெளிவர எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜி .கிருஷ்ணமூர்த்தி
தலைமைச் செயலாளர்
தலைமைச் செயலாளர் செயலகம்
வடக்கு-கிழக்கு மாகாணம்
திருகோணமலை

வடக்கு - கிழக்கு மாகாண
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்
திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் வழங்கும்

## ஆசிச்செய்தி

எமது அமைச்சினால் காலாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படும் "புது ஊற்று" சஞ்சிகையின் முதலாவது வெளியீட்டுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வமைச்சு கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை ஆகிய மூன்று விடயம் சார் தொழிற்பாடுகளுக்கும் பொறுப்புடையதாகும். இம்மூன்று துறைகளும் எமது மக்களின் வளர்ச்சிக்கும் ஏனையோரின் நோக்குக்கும் முக்கியமானவை.

அத்தகைய முக்கியமான துறைகளில், தொழிற்படு செயற்பாட்டில் ஈடுபடுவோர் திண்ணியமான நீண்டகாலப்பார்வை கொண்டவர்களாகவும் தரிசனம் மிக்கவர்களாகவும் அக - புற மாற்றத்திற்குத் தேவையான விதத்தில் தமது திறனையும் தகமையையும் தொழில்சார் அறிவையும் வளர்க்கவேண்டியவர்களாகவும் இருக்கின்றனர்.

உலகமும் அதனுடன் தொடர்பு கொண்ட ஏனையவையும் மாற்றத்திற்குள்ளாகுபவை. மாற்றமடைந்துவரும் உலக ஓட்டத்திலிருந்து மாற்றமடையாதிருக்கும் எவையும் காலப்போக்கில் உபயோகமற்றவையாக மாறிவிடுவதுடன் மாசடைந்தவையாகவும் மனித சமுதாயத்திற்கு ஆபத்தானவையாகவும் அமைந்து விடும். இத்தன்மையிலிருந்து இத்துறைகளோடு சம்பந்தப்பட்டவர்களை விலக்கிக்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒரு சிறிய அணுகுமுறையே இச்சஞ்சிகையாகும்.

இச்சஞ்சிகை தமிழ், சிங்கள மொழிகளில் வெளியிடப்படுகின்றது. இவை நீண்டு வாழவும் இச்சமூகத்தோடு இரண்டறக்கலக்கவும் தனது இலக்கினை அடையவும் எனது வாழ்த்துக்கள்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு-கிழக்கு மாகாணம்
திருகோணமலை

# கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் (தமிழ்) இலக்கணம் கற்பித்தல்

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

தமிழ்த்துறை

யாழ். பல்கலைக்கழகம்

தமிழ்மொழிப் பயிற்றலின் முக்கிய பிரச்சினைகள் இரண்டினுள் ஒன்று இலக்கணம் கற்பித்தல் பற்றியதாகும். மற்றது இலக்கியம்.

ஒரு குழந்தையின் மொழியறிவுக்கு இலக்கணம் மிக அவசியமானது என்று கருதப்பட்டு வந்துள்ளது. இந்த மொழியறிவு என்ற தொடரை விளங்கிக் கொள்வது அவசியம். மொழி பற்றிய அறிவா? அல்லது மொழியைக் கையாள்வதற்கான அறிவா என்ற வினாக்களை மிகத் திட்டவட்டமாக நம் மனக்கண்முன் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

கனிட்ட இடைநிலை என்பது ஆறாம், ஏழாம், எட்டாம் வருட வகுப்புக்களைக் குறிப்பது. இந்த வகுப்புக்களுக்கு வரும் மாணவரின் வயது 11, 12, 13ஆக இருக்கும். இந்த வயதில் அவர்கள் எண்ணக்கரு விளக்கமுடையோராய், காரண காரியத் தொடர்புபற்றி ஆவல்காட்டுவோராய் காணப்படுவது இயல்பு.

இவர்களுக்குப் பயிற்றப்படும் மற்றைய பாடங்களை எவ்வாறு அமைத்துள்ளோம் என்பதைப்பார்த்து அதற்கேற்ப (அதிலும் பார்க்க முக்கியம்) அவற்றை விளங்கிக்கொள்வதற்கு வேண்டிய மொழித்திறனைப் பெற்றுக்கொள்ளும் முறையில் மொழிப்பாடத்தையும் அமைத்துக் கொள்வது அவசியம்.

இப்படி ஒப்புநோக்கிப் பார்க்கும்பொழுதுதான் ஒரு முக்கிய உண்மை நமக்குப்புலனாகின்றது. மற்றைய பாடங்களின் கற்பித்தல் முறைகளை (அவ்வக் கற்பித்தற் துறைகளின் வளர்ச்சிக்கேற்பவும் கல்விப்புகட்டல் பற்றிய அறிவுத்துறையின் வளர்ச்சிகளிற்கேற்பவும்) மாற்றிக் கொண்டு வந்துள்ள அளவுக்கு தமிழ் மொழி கற்பித்தலை மாற்றிக்கொள்ளவில்லை என்பது தெரிகின்றது. இதற்குக் கல்வியியலுக்கு அப்பாலான சமூகவியற் காரணம் உள்ளது.

இதனால் ஒரு இக்கட்டான நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம். அதாவது மற்றைய பாடங்களின் அறிமுறை நவீனப்பட்டுக்கொண்டுவர அவற்றை விளக்கவும் விளக்கியவற்றை வெளிப்படுத்தவும் வேண்டியதான மொழிக் கல்வியோ பின்தங்கிவிடுகின்றது. இந்த அடிப்படை உண்மையை உணராமல் மாணவர்களையும் ஆசிரியர்களையும் குறைகூறுகின்றோம்.

நாம் இன்று கற்பிக்கும் இலக்கணம் எந்த அளவுக்குப் பிள்ளையின் மொழிக் கையாளுகைக்கு உதவுகின்றது என்பதே பிரதானமான விடயமாகும். பிள்ளை தான் பயிலும் இலக்கணத்தைக் கொண்டு மொழியை ஆக்க பூர்வமாகப் பயன்படுத்தும் திறனை வளர்க்க வேண்டும். ஆனால், இதற்கு எந்த அளவுக்கு நாம் பயிற்றும் இலக்கணம் உதவுகின்றது?

நாம் பயிற்றுவது பெரும்பாலும் மொழி பற்றிய தகவல்களே. இந்தத் தகவல்களிற் பல இந்த வகுப்பு நிலைகளுக்கு அப்பாற்பட்டவை. பிள்ளை அவற்றை மனனஞ் செய்யலாமே தவிர விளக்கி உள்வாங்கிக்கொள்ள முடியாது. இதுமாத்திரமல்ல நாம் இலக்கணத்தைப் படிப்பிக்கும் முறையும் விதிமுறையானது. வைத்தியர் ஒருவர் நமது நோய்க்கு இன்ன மருந்தைச்

சாப்பிடுங்கள் என்று விதிப்பது மாதிரி, நமக்கு நோய் என்னவென்று தெரியாது. இந்த மருந்து அதை எப்படிக் கட்டுப்படுத்துகிறது என்பதும் தெரியாது. ஆனால் மற்றைய பாடங்களைப் படிக்கும் பொழுது மாணவர்களுக்கு நாம் காரண காரியத் தொடர்போடுதான் படிப்பிக்கின்றோம்.

எனவே இங்குள்ள பிரச்சினை இலக்கணம் வேண்டாம் என்பதல்ல. இலக்கணம் என்பது என்றால் என்ன? அந்த இலக்கணத்தில் இந்த வகுப்புகளுக்கு வேண்டியவை யாவை என்பதே முக்கியமாகும்.

இலக்கணம் என நாம் இன்று கற்பிப்பதிலே பெரும்பாலானவை உண்மையான, நியமமான இலக்கணத்திற்குள் வரா. ர ற, ல ள ழ, ன ண பேதம், ஒத்தசொல் எதிர்ச்சொல் என்பன மொழித்திறன் மொழிவகை பற்றியனவே.

இலக்கணம் என்பது சொற்களின் அமைப்பொழுங்கிற் காணப்படும் நியமம்பற்றியதாகும். இந்த அமைப்பொழுங்கிலேதான் வாக்கியத்தின் பொருள் தங்கியுள்ளது. வாக்கிய அமைப்பில் சொற்கள் அமைந்துள்ள முறைமையில் சந்த அமைப்பின் முறைமையில் ஒரு பயன்பாடு, அந்தப்பயன்பாட்டை மாணவர் நன்கு விளங்கிக் கொள்ளும் வகையிலேதான் இலக்கணம் அமைதல் வேண்டும்.

அதாவது இலக்கணம் என்பது மொழியின் அசைவியக்கம் பற்றிய தகவல் விளக்கம் ஆகும். நாம் பயிற்றும் இலக்கணம் நமது மொழியின் அசைவியக்கத்தை எந்த அளவுக்கு விளக்குவதாக அமைகின்றது என்று நோக்குதல் வேண்டும். நாம் கொடுக்கும் தகவல்கள் எந்த அளவுக்கு மாணவரின் மொழியோடு இணைந்து நிற்கின்றது என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் இலக்கணம் கற்பிக்கும்பொழுது, நாம் ஒரு முக்கிய உண்மையை மனத்திருத்திக் கொள்ளல் வேண்டும்.

நாம் அந்தப்பிள்ளையின் தாய்மொழி இலக்கணத்தையே கற்பிக்கிறோம். தன்தாய்மொழி என்றளவில் அந்தப்பிள்ளை இந்த மொழிமூலம் தனது தேவைகள் யாவற்றையும் பூர்த்தி செய்கிற ஒரு நிலையிலேயே உள்ளது. மொழியின் "வழக்கு" அதற்குத் தெரியும். அதற்குத் தெரியாதது, ஏன் இந்த வழக்குஇப்படி அமைந்துள்ளது என்பதுதான். நாம் பயிற்றும் இலக்கணம் "ஏன்", "எப்படி", "எதற்கு" என்ற வினாக்களுக்கு விடையளிப்பதாக அமைய வேண்டும். அதாவது பிள்ளை தனது மொழிக் கையாளுகையைத் தானே கண்டுபிடிக்குடி ஆற்றலை வளர்க்க வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளையின் ஆர்வம் மேலும் மேலும் தூண்டப்பெறும்.

இந்த இலக்கை அடைவதற்கு நாம் நமது பாடத்தை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது அடுத்த முக்கிய பிரச்சனையாகும். முழுமையில் இருந்து பகுதிக்குச் செல்வதா? பகுதியிலிருந்து முழுமைக்குச்செல்வதா என்பது கேள்வி. நமது பாரம்பரிய இலக்கணம் பகுதியில் இருந்து முழுமைக்குச் செல்வது (எழுத்து, சொல், தொடர்). அந்த அமைப்பினைச் சற்று மாற்றி முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லும் முறைமையினை மேற்கொள்ளல் வேண்டும்.

மேலும் கற்பிப்பவற்றை துண்டு துண்டாக எடுத்துக்கூறாமல் ஒரு தர்க்க ரீதியான வளர்ச்சி அமைப்பினுள் வைத்து விளக்க வேண்டும். அப்பொழுதுதான் இலக்கணம் கூறும் ஒழுங்கமைப்பின் முக்கியத்துவத்தை பிள்ளை விளங்கிக் கொள்ளும்.இவ்வாறு தர்க்க ரீதியாக ஒழுங்கமைத்துக் கூறுகின்ற போது பிள்ளையின் வயது, அதன் விளக்க நிலை, அதன் மொழித்தேவை ஆகிய மூன்றையும் கவனித்தல் வேண்டும்.

இந்த தர்க்க ரீதியான ஒழுங்கமைப்பிற்கு மொழியியல் அறிவு பெரிதும் உதவும். மொழியியல் என்பது மொழிகள் பற்றிய உலகப் பொதுவான ஆய்வாகும். அது மனித மொழி என்பதன் உலகப் பொதுவான தன்மைகளை ஆராய்ந்து ஒவ்வொரு பண்பாட்டிலும் மொழி எவ்வாறு பயன்படுகிறது என்பதை ஆராய்வது. இந்த மொழியியல் தரும் விளக்கம் நமது இலக்கணத்தை, அதன் மரபை நாம் நன்கு விளங்கிக் கொள்ள உதவும். அந்த விளக்கத்தோடு தமிழ் இலக்கணத்தை மாணவர்களுக்கு கற்பிக்கும்போது நமக்கும் தெளிவு இருக்கும். மாணவர்களுக்கும் விளக்கம் கூடும். ஆர்வம் பெருகும்.மாணவனின் ஒட்டுமொத்தமான மொழித்திறன் வளர்ச்சிக்கு நாம் பயிற்றும் இலக்கணம் எவ்வாறு பயன்படப்போகிறது என்பது பற்றிய தெளிவுடனேயே இலக்கணப்பாடம் அமைக்கப்படல் வேண்டும்.

# இலங்கையில் தமிழர்களின் உயர்கல்வி அண்மைக்காலப் போக்குகள்

**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**
தலைவர்
கல்வித்துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

1989 – 1992ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் பல்கலைக்கழகங்களுக்கு மூன்று முறை மாணவர்கள் அனுமதிக்கப் பட்டனர். இவ் அனுமதிகளில் தமிழ் மாணவர்களின் நிலை என்ன என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

1970ஆம் ஆண்டின் பின்னர் உருவாக்கப்பட்ட பல்வேறு அனுமதிக் கொள்கைகள் புள்ளிகளைத் தரப்படுத்தல், மாவட்ட ரீதியான அனுமதி, பின்தங்கிய மாவட்டங்களுக்கு விசேட ஒதுக்கீடு என்பவை சார்ந்ததாக அமைந்தன. இதன் விளைவாக விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் முன்பு திறமைச்சித்தி அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டபோது தமிழ் மாணவர் பெற்ற மேலதிக வாய்ப்புக்களை இழக்க நேரிட்டது. இப்போதனா பீடங்களின் மாணவர் தொகை நாட்டின் இனவீதாசாரத்திற்கு ஏற்ப அமைதல் வேண்டும் என்ற முறையில் அனுமதிக் கொள்கைகள் அமைந்தன.

அத்துடன் பல்கலைக் கழகங்களின் மொத்த மாணவர் தொகையில் தமிழர்களின் வீதாசாரம் அவர்களது இன வீதாசாரத்திற்குக் குறைவாகவே அமைந்தது. இதற்கு ஒரு காரணம், இந்திய வம்சாவழித் தமிழர்கள் தமது வீதாசாரத்திற்கு ஏற்ப (5.5) அனுமதி பெறாமை எனலாம். இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் இருவரையும் சேர்த்துப் பார்த்தால் மாணவர் அனுமதியில் 18 – 20 வீதத்தினர் தமிழராக இருப்பின் இனவீதாசாரம் என்ற அளவுகோலின் அடிப்படையில் அது திருப்திகரமானது எனலாம்.

ஆயினும் அண்மைக்காலப் புள்ளிவி பரங்களின்படி (1989 தொடக்கம் 1992 வரையிலான மூவாண்டுகளுக்கான அனுமதிகள்) பல போதனா பீடங்களில் இவ்வாறான இனவீதாசாரம் கூட பேணப்படவில்லை. கலைப் போதனாபீட அனுமதியில் இந்நிலைமை பின்வருமாறு அமைகின்றது.

| அனுமதியாண்டு | மொத்த மாணவர் அனுமதி | தமிழ் மாணவர் | தமிழ் மாணவர் வீதம் |
|---|---|---|---|
| 1989 / 90 | 1849 | 214 | 11.5% |
| 1990 / 91 | 2641 | 317 | 12.0 % |
| 1991 / 92 | 2696 | 422 | 15.6% |

கல்வியில் முன்னேறிய தமிழ் மாவட்டங்கள் கலைத்துறைக் கல்வியில் அக்கறை செலுத்தாமையினால் அப்பகுதிகளில் இத்துறையில் மாணவர்கள் சேர்ந்து பயிலுவதும்குறைவாக இருக்கலாம். அத்துடன் மலையக மாணவர்களின் அனுமதி குறைவாக இருப்பதால் கலைத்துறையில் தமிழ் மாணவர் அனுமதி 18 வீதத்தையும் எட்டவில்லை.

கலைத்துறையை விடுத்து முகாமைத்துவம், வர்த்தகவியல் போன்ற துறைகளில் தமிழ் மாணவர்கள் கூடிய சிரத்தையுடன் பயில்வதால் அத்துறைகளில் தமிழ் மாணவர் அனுமதி வீதாசாரம் திருப்தியாக இருந்தது. முகாமைத்துவத் துறைகளில் அனுமதி பெற்ற மொத்த மாணவர்களில் தமிழ் மாணவர்களின் வீதாசாரம் 17-19 வீதமாக அமைந்தது. வர்த்தகவியல் துறையில் அனுமதி பெற்ற தமிழ் மாணவர்களின் வீதாசாரம் 19-25 வீதமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

| அனுமதி ஆண்டு | முகாமைத்துவம் மொத்த மாணவர் அனுமதி | தமிழ் மாணவர் வீதம் | வர்த்தகவியல் மொத்த மாணவர் அனுமதி. | தமிழ்மாணவர் வீதம் |
|---|---|---|---|---|
| 1989 / 90 | 458(89) | 19.4 | 611(158) | 25.8 |
| 1990 / 91 | 708(122) | 17.2 | 899(198) | 22.0 |
| 1991 / 92 | 812(139) | 17.2 | 812(158) | 19.0 |

அடைப்புக் குறிக்குள் தமிழ் மாணவர் தொகை

மேற்படி துறைகளில் பெருமளவுக்கு தமிழர் இனவீதாசாரம் பேணப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான வீதாசாரம் பேணப்பட்டிருக்கும் வேறு இரு துறைகள் பௌதீக விஞ்ஞானமும் பொறியியலுமாகும். ஆயினும் மருத்துவம், உயிரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் இனவீதாசாரத்திற்கும் குறைவான தமிழ் மாணவர்களே அனுமதி பெற்றுள்ளனர். இதனை விடக் குறைந்த வீதத்தில் தமிழ் மாணவர்கள் சட்டத்துறையில் அனுமதி பெறுகின்றனர். விஞ்ஞானம் சாராத க.பொ.த உயர்நிலை வகுப்புகளில் பயிலும் தமிழ் மாணவர்களுக்குக் கலைத்துறையும் சட்டத் துறையும் கவர்ச்சிகரமாக இல்லைபோலும். தொழில் வாய்ப்புத் தொடர்பான காரணங்களுக்காக அவர்கள் முகாமைத்துவம், வர்த்தகவியல் போன்ற துறைகளையே பெரிதும் நாடுகின்றனர். க.பொ.த. உயர் நிலை வகுப்புகளில் கலைத்துறை மாணவர்களை விட வர்த்தகவியல் மாணவர்களே அதிகம் காணப்படுகின்றனர்.

| அனுமதி ஆண்டு | சட்டத்துறை மொ.அ.த.மாவீ | பௌதிகவிஞ். மொ.அ.த.மா.வீ | உயிரியல் விஞ். மொ.அ.த.மா.வீ | மருத்துவம் மொ.அ.த.மா.வீ | பொறியியல் மொ.அ.த.மா.வீ |
|---|---|---|---|---|---|
| 1989 / 1990 | 9.5% | 21.6% | 17.0% | 15.2% | 25.6% |
| 1990 / 1991 | 10.6% | 20.9% | 15.1% | 15.9% | 22.8% |
| 1991 / 1992 | 11.4% | 19.2% | 14.9% | 14.8% | 21.1% |

மொ.அ.த.மா.வீ - மொத்த அனுமதியில் தமிழ் மாணவர் வீதம்

உயிரியல் விஞ்ஞானம், மருத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தமிழ்மாணவர்களின் தொகை அதிகரிக்கப்பட இடமுண்டு. தமிழ் மாணவர்கள் மாவட்ட அனுமதியில் தங்கியிராது திறமைச் சித்தியில் தங்கினால் மட்டுமே அவர்கள் தொகை அதிகரிக்க முடியும். பொறியியல் மாணவர் மொத்த அனுமதியில் தமிழ் மாணவர்கள் அனுமதி 25.6 வீதமாக அமைய (1989–1990) அவர்களுடைய திறமை சித்தியே காரணம்.

மொத்தத்தில் பல்வேறு பாடத்துறைகளையும் பொறுத்தவரையில் தமிழ் மாணவர் அனுமதி சற்றுக் கூடிக்காணப்படும் துறைகளில் அவ்வாறான அதிகரிப்புக்கு யாழ் மாவட்டமே காரணம் என்பதைப் புள்ளிவிபரங்கள் காட்டும். போர்ச்சூழல், மற்றும் பாதகமான பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக யாழ் மாவட்ட மாணவர்கள் தேசியரீதியான போட்டிப் பரீட்சையில் திறமையாகச் செய்யத் தவறின் இந்த அளவு மாணவர் கூட அனுமதி பெற முடியாது. எடுத்துக்காட்டாக 1991/92இல் அனுமதி பெற்ற தமிழ் மாணவர்கள் 1375பேர், இவர்களில் 963பேர் அதாவது 71வீதமானவர்கள் யாழ் மாவட்ட மாணவர்களாவர்.

வட,கிழக்கு,தமிழர் வாழும் மலையக மாவட்டங்களிலிருந்து 412 தமிழ் மாணவர்கள் மட்டுமே அனுமதி பெற்றுள்ளனர். இவ்வாண்டில் அனுமதி பெற்ற மொத்த மாணவர்களில் தமிழ் மாணவர் வீதாசாரம் 17.5 ஆகும். பல்வேறு தமிழ் மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ் மாவட்டம் கல்வித் துறையில் வகிக்கும் முதல் இடத்தை விளக்கும் தரவுகள் மேலே தரப்பட்டுள்ளன.

அதே வேளையில் இலங்கையில் உள்ள சகல 25 மாவட்டங்களையும் பொறுத்தவரையில் அப்போதைய (1990) போர் மற்றும் பாதகமான சூழ்நிலைகளில் மாணவர் அனுமதியில் யாழ் மாவட்டம் எத்தகைய இடத்தைப் பெற்றது என்பதை சித்தியின் அடிப்படையில் சித்திபெற்றோரின் தொகையைப் பயன்படுத்த முடியும். கலைத்துறையில் குருநாகல் மாவட்டத்திற்கு அடுத்த இடம் யாழ் மாவட்டம் பெறுகிறது.

முகாமைத்துவம், வர்த்தகம், சட்டம், உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவிஞ்ஞானம், மருத்துவம், பல் மருத்துவம் பொறியியல் ஆகிய துறைகளில் யாழ் மாவட்டம் கொழும்பு மாவட்டத்திற்கு அடுத்த இடத்தைப் பெறுகிறது. முன்னேறிய சிங்கள மக்கள் செறிந்து வாழும் பிற திறமைச் சித்தியில் யாழ் மாவட்டம் கல்வித் துறையில மாவட்டங்களை விட குறிப்பாக மூன்றாம் இடத்தை விட பெரிதும் முன்னணியில் நிற்கிறது.

| மாவட்டங்கள் | திறமைச்சித்தி பெற்று அனுமதி பெற்றோர் 1991 / 92 |
|---|---|
| கம்பஹா | 236 |
| களுத்துறை | 207 |
| கண்டி | 246 |
| காலி | 243 |
| மாத்தறை | 203 |
| யாழ்ப்பாணம் | 586 |
| குருநாகல் | 361 |

தமிழ் மாவட்டங்களாகிய யாழ்ப்பாணம் எந்த அளவுக்கு முன்னணியில் நிற்கின்றதோ அந்த அளவுக்கு மட்டக்களப்புத் தவிர்ந்த பிற கிழக்கு தமிழ் மாவட்டங்கள் யாவும் திறமைச் சித்தியில் பின்தங்கியுள்ளன. கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற தமிழ் மாவட்டங்கள் மாணவர் அனுமதிக்கு மாவட்ட அனுமதியையே நம்ப வேண்டியுள்ளது.

யாழ் மாவட்ட மாணவர்களின் திறமைச் சித்தியை அவர்கள் பெற்ற மொத்த புள்ளியைப் பிற மாவட்ட மாணவருடன் ஒப்பிட்டும் அறியமுடியும்.

நாட்டில் 275 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்திய 1462 மாணவர்களில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தோர் 370 பேர் அதாவது இவ்வாறு உயர்ந்த புள்ளி பெற்றோரில் 25 வீதமானவர்கள் யாழ் மாவட்ட மாணவர் (1991/92).

இவ்வகையில் கொழும்புக்கு அடுத்தபடியாக 275 புள்ளிகளுக்கு அதிகமாக புள்ளிகளைப் பெற்றோர் யாழ் மாணவராவர். (கொழும்பு - 462 மாணவர், மூன்றாம் இடம் பெறும் கம்பஹா -8 மாணவர் மட்டுமே, காலி,மாத்தறை முறையே 75,62 மாணவர்கள் 1991/ 1992) பொறியியலில் 107 யாழ் மாணவர்கள் 275 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்று முதலிடம் பெற்றனர். (கொழும்பு -75 மாணவர், காலி- 11,மாத்தறை - 11) அவ்வாறே கலைத்துறையில் 275க்கு மேல் நாடளாவிய ரீதியில் புள்ளி பெற்ற 274பேரில் 47 பேர் யாழ் மாவட்ட மாணவர். இவ்வகையில் மாவட்ட ரீதியில் அவர்களே நாட்டில் முதலிடம் பெறுகின்றனர். (குருநாகல் இரண்டாம் இடம் -98 பேர், கொழும்பு -30 பேர்)

வணிகவியற் துறையில் யாழ் மாணவர்கள் முதலாம் இடத்தையும் முகாமைத்துவத்திலும் மருத்துவத்திலும் இரண்டாம் இடத்தையும் பெறுகின்றனர். ஆயினும் சட்டம், பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் யாழ் மாணவர்கள் 275 புள்ளிகளைப் பெறவில்லை. திறமைச் சித்தியில் 275க்கு மேல் புள்ளி பெற்றோர் மருத்துவம், பொறியியல் ஆகிய பீடங்களுக்கு அனுமதி பெற்றுவிட்டனர்.

கடந்த பத்தாண்டுகாலப் புள்ளிவபரங்களைப் பார்க்குமிடத்து மிக அண்மைக்காலத்தில் (1990/92) யாழ் மாவட்டத்தில் திறமைச் சித்தியின் அடிப்படையில் அனுமதிபெறுவோரின் வீதாசாரம் அதற்கு முன்னைய ஆண்டுகளை விடக் குறைந்து செல்வதை அவதானிக்கமுடிகிறது. 1980/ 1981, 1984/ 1985, 1987 /1988 ஆகிய ஆண்டுகளில் திறமைச் சித்தியின் படி அனுமதிபெற்ற மாணவர்களில் யாழ் மாவட்ட மாணவரின் வீதாசாரம் முறையே 21.4 , 26.4 , 20.6 , 23.2 ஆக இருந்தமை குறிப்பிடத் தக்கது. ஆயினும் அம்மாவட்டத்தின் தற்போதைய பாதகமான சூழ்நிலை காரணமாக இவ் வீதாசாரம் 1990/ 1991 இல் 16.2 ஆகவும் 1991/ 1992 இல் 15.7 ஆகவும் வீழ்ச்சியுற்றமையும் குறிப்பிடத்தக்கது. அதாவது திறமைச் சித்தியினால் அனுமதி பெறுவோர் வீதாசாரம் 1991/ 1992 இன் பின்னர் மேலும் வீழ்ச்சியடையக்கூடிய போக்கினையும் அவதானிக்க முடிகிறது.

<u>1991/ 1992 ஆம் ஆண்டுக்கான மாணவர் அனுமதி பின்வரும் வகையில் அமைந்தது.</u>

திறமைச்சித்தியின் அடிப்படையில் 40 வீத மாணவர் அனுமதி பெற்றனர் மொத்த மாணவர் 7909 இல் 3888 மாணவர்கள் திறமைச் சித்தியின்படி அனுமதிக்கப்பட்டனர். 55 வீதமான மாணவர்கள் மாவட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்டனர். 5 வீதமான மாணவர்கள் பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து அனுமதிக்கப்பட்டனர். இவ்விருவகை (55% ,5% ) மாவட்ட அனுமதியின் கீழ் அனுமதி பெற்றவர்கள் 4021 பேர். தமிழர் செறிந்து வாழும் மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் பெற்ற அனுமதியை நோக்கும்போது சில முக்கிய போக்குகளை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து அனுமதி பெற்றோரில், மாவட்ட ரீதியான அனுமதியை விட திறமை அடிப்படையில் சித்தி பெற்றோர் தொகை அதிகம். யாழ்ப்பாணத்திலிருந்து மட்டும் திறமை அடிப்படையில் 586 பேரும் மாவட்ட அடிப்படையில் 377பேரும் அனுமதி பெற்றுள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட அனுமதி விபரம் இவ்வகையில் முறையே 120 (திறமைச் சித்தி) 76 (மாவட்டம்) ஆகும்.

தமிழர் செறிந்து வாழும் பிற மாவட்டங்களான கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து திறமையடிப்படையில் அனுமதி பெற்ற மாணவர்களின் மொத்த தொகை 69மட்டுமே. மாவட்ட ரீதியான அனுமதிப்படி இச் சகல மாவட்டங்களிலிருந்தும் அனுமதி பெற்றோர் தொகை 191 பேர். இத்தொகை சற்று அதிகம் போலத் தெரிவதற்குக் காரணம் இம்மாவட்டங்கள் (மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ) யாவுமே பின்தங்கிய மாவட்டங்களாகக் கருதப்பட்டு மேலதிக 5 அனுமதிக்கு உரித்துடையவையாயின.

இவ்வைந்து தமிழ் மாவட்டங்களுடன் மட்டக்களப்பு மாவட்டத்தையும் ஆறாவதாகச் சேர்த்துக் கொண்டால் மற்றொரு உண்மை பெறப்படும். இவ்வாறு மாவட்டங்களிலிருந்து திறமையடிப்படையிலும் மாவட்ட ரீதியாகவும் அனுமதி பெற்றோர் தொகையைவிட தனியொரு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து அனுமதி பெற்ற மாணவர் தொகை அதிகம் என்பதைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.

தமிழ் மாவட்டங்களிலிருந்து மாணவர் அனுமதி 1991 1992

| மாவட்டம் | திறமைச்சித்தி | மாவட்ட அடிப்படை |
|---|---|---|
| யாழ் மாவட்டம் | 586 | 377 |
| ஏனைய ஆறு தமிழ் மாவட்டங்கள் | 189 | 267 |

யாழ் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மக்கள் தொகை குறைவு என்பதால் மாவட்டரீதியான அனுமதியில் மாணவர் தொகை குறைவது இயல்பே. ஏனெனில் மாவட்ட ரீதியான மாணவர் அனுமதி ஒவ்வொரு மாவட்டத்தின் மொத்த சனத்தொகையைக் கொண்டே கணக்கிடப்படுகின்றது. எவ்வாறாயினும், மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய தமிழ் மாவட்டங்கள் திறமைச் சித்தியின் அடிப்படையில் அதிக இடங்களைப் பெற முடியவில்லை. மிக முக்கியமாக இப் பின்தங்கிய தமிழ் மாவட்டங்கள் திறமைச்சித்தியின் அடிப்படையில் மருத்துவம், பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், பொறியியல் ஆகியதுறைகளுக்கு ஓரிரு மாணவர்களையே அனுப்ப முடிகின்றது.

விஞ்ஞான பயிற்சி நெறிகளில் தமிழ் மாவட்ட மாணவர் அனுமதி (திறமைச் சித்தி) 1991 / 92

| மாவட்டம் | பௌதீகவிஞ்ஞானம் | உயிரியல்விஞ்ஞானம் | மருத்துவம் | பொறியியல் |
|---|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 85 | 21 | 44 | 60 |
| 2. கிளிநொச்சி | – | – | – | – |
| 3. மன்னார் | – | – | – | – |
| 4. முல்லைத்தீவு | – | – | – | 01 |
| 5. வவுனியா | 01 | – | – | – |
| 6. திருகோணமலை | – | – | – | 01 |
| 7. மட்டக்களப்பு | 02 | – | 03 | 03 |

மாவட்ட,பின்தங்கிய மாவட்ட அடிப்படையிலான அனுமதி முறையில்லாவிடின் இவ்வைந்து பின்தங்கிய மாவட்டங்களிலுமிருந்து ஒரு மாணவரேனும் திறமைச் சித்தியின் அடிப்படையில் அனுமதி பெற முடியாது போய்விடும். யாழ்,மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய 5 மாவட்டங்களிலிருந்து மாவட்ட அடிப்படையில் பொறியியல் பீடத்துக்கு 21 பேரும் மருத்துவ பீடத்திற்கு 31 பேரும் அனுமதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள்,தமிழ் மாவட்டங்கள்உயர்கல்வித் துறையில் முன்னேறிவிட்டார்கள் என்ற ஒரு நிலைப்பாடு உண்டு. தமிழர்கள் மத்தியில் உயர்கல்வியில் பின்தங்கிய பிரிவினர் இருப்பதை மாவட்ட ரீதியான இவ்விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக எடுத்துக்காட்டப்பட்ட ஐந்து தமிழ் மாவட்ட மாணவர்கள் தேசிய ரீதியாகப் போட்டியிட்டு திறமைச் சித்தி அடிப்படையில் அனுமதி பெற முடியாமைக்கான காரணங்களை அப்பகுதிகளின் அரசியல்,சமூக, கல்வித்துறைத் தலைவர்கள் ஆராயவேண்டும். இப்பகுதிகளில் க.பொ.த உயர்நிலைக் கல்விக்கான அடிப்படை வசதிகள் இல்லாத நிலை இதற்குக் காரணமாக இருக்கலாம். அங்கு நிலவும் போர் நிலையைக் காரணமாகக் கூறமுடியாது. ஏனெனில் யாழ் மாவட்ட மாணவர் போர் நிலையிலும் சிறப்புற பணியாற்றி இருப்பது குறிப்பிடத் தக்கது.

தென் மாவட்டங்களில் மலையகத் தமிழர்கள் செறிந்து வாழும் நுவரெலியா, பதுளை, மாத்தளை ஆகிய மாவட்டங்களும் இவ்வாறே மாணவர் அனுமதியில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. இம்மூன்று மாவட்டங்களில் இருந்து பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளுக்கு திறமை அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படவில்லை. (மொத்தத்தில் 6 மாணவர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர்.) இப்பகுதிகளில் இனவேறுபாடு இன்றி யாவரது கல்வி நிலைமைகளும் பின்தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இம்மூன்று மலையக மாவட்டங்களிலிருந்து மருத்துவம், பொறியியல் உட்பட சகல விஞ்ஞானப் பயிற்சி நெறிகளுக்கும் மாவட்ட அடிப்படை அனுமதி முறையின் காரணமாகவே 213பேர் வரை அனுமதிபெற முடிந்தது. இம்மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல்,சமூக, கல்வித்துறைத் தலைவர்கள் கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் இதுவாகும். இனவகைப்படியான பல்வேறு தகவல்களைத்தரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில இந்த 213பேர் பற்றிய விபரங்களை அறிய முடியாதுள்ளது.

உசாத்துணை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புள்ளிவிபரக் கைநூல்கள் ,1989 – 1992.

"எந்தக்கருத்தும் ஒரு கலைப்படைப்பின் அடிப்படையாகிவிட முடியாது. எது மக்களிடையே தொடர்புக்கும் உறவுக்கும் உதவக்கூடியதோ அது மட்டும்தான் கலைஞனுக்கு மெய்யாகவே உத்வேகம் ஊட்டக்கூடியதாய் இருக்கும். இத்தகைய தொடர்புக்கும் உறவுக்கும் சாத்தியமான வரம்புகள் கலைஞனால் நிர்ணயிக்கப்படுவவை அல்ல. அந்தக் கலைஞனைத் தனக்கு உரியவனாகக் கொண்ட சமுதாயம் முழுவதுமாய் வந்தடைந்துள்ள கலாச்சார வளர்ச்சி நிலையால் நிர்ணயிக்கப்படுபவையாகும்."

- பிளாக்கனோவ் -

"ஒரு குறிப்பிட்ட கலைப்படைப்பின் வடிவத்தை அதன் உள்ளடக்கம் மட்டுமே நிர்ணயிப்பதில்லை அதோடு சேர்ந்து பல அம்சங்களும் தீர்மானிக்கின்றன. ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் ( அல்லது படைப்பின் மீது செல்வாக்கு செலுத்தும் சமூகக்குழுக்களின்) மனோபாவங்கள், அதன் சிந்தனைப்போக்கு, அதன் உரையாடல்கள், அந்தக் குறிப்பிட்ட சமூகக் கலாச்சாரத்தின் பொதுவான வளர்ச்சிநிலை, அண்டைய சமூகங்களின் கலாச்சாரத்தாக்கம், பழம் மரபுகளின் செல்வாக்கு, அதிலிருந்து விடுபடத்துடிக்கும் புதுமுயற்சிகள், ஆகிய இத்தகைய அனைத்து அம்சங்களும் குறிப்பிட்ட கலைப்படைப்பின் வடிவத்தின் மீது செல்வாக்கு செலுத்திப் பாதிப்பை ஏற்படுத்தும் எனலாம். இவை வடிவத்தை நிர்ணயிப்பதில் துணைசக்திகளாகப் பணியாற்றுகின்றன."

- லூனசார்ஸ்கி -

# செயன்முறைக்கல்வியின் அவசியம்

செல்வி. திலகவதி பெரியதம்பி MSc.(Agri.) SLEAS
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு – கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

நல்லதொரு பாடசாலையில் ஆண்டு – 1 அனுமதி பெற வேண்டும் என்பதற்காக முன்பள்ளிக்கு மூன்று வயதிலேயே பிள்ளைகள் அனுப்பப்படுகின்றனர். ஆண்டு – 6 இல் தலைசிறந்த பாடசாலையில் அனுமதி பெறுவதற்காக புலமைப்பரிசில் பரீட்சைக்கு என மாணவர் தயார் செய்யப்படுகின்றனர். இவ் வண்ணமே பல்கலைக்கழகத்தில் நுழைவதற்காக பாடசாலை செல்வதுடன், பல தனியார் கல்வி நிறுவனத்தின் படிகளில் ஏறி இறங்குகின்றனர். பாடசாலையில் சேர்வதற்கு முன்பிருந்தே பெற்றோர்களாலும், பாடசாலைகளில் ஆசிரியர்களாலும் பரீட்சையை மையமாகக் கொண்டு பெரும்பழு சுமத்தப்பட்டு மாணவர்கள் திக்குமுக்காடுகின்றார்கள். தாமாகவே தேடிக் கற்கும் ஆற்றல் அவர்களிடம் விருத்தி செய்யப்படுவதில்லை. அவர்கள் இயந்திரமாகவே செயற்படுவதற்கு பழக்கப்படுகின்றார்கள். அவர்களுக்காகத் தீர்மானங்கள் மற்றவர்களால் எடுக்கப்படுகின்றன.

தற்பொழுது நடைமுறையில் உள்ள பரீட்சை முறைகளில் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்று கூறுகளில் அறிவு அடைவுமட்டத்தை அளவீடு செய்வனவாகவும், திறன், மனப்பாங்கு ஆகியவற்றை அளவிடும் அம்சங்கள் குறைவாகவும் காணப்படுகின்றன. செயன்முறைக் கல்வியில் பங்குபற்றாமலே எந்தவொரு பரீட்சையிலும் உச்சப்பெறுபேறுகளைப் பெறக் கூடியதாக பரீட்சைகள் அமைவதால் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் செயன்முறைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பெரும்பான்மையான பாடசாலைகளில் தொழிற்கூடங்களும் ஆய்வு கூடங்களும் மூடப்பட்டே கிடக்கின்றன. உபகரணங்கள் அலுமாரிகளில் உறங்கிக் கிடக்கின்றன. கல்விக்கான பெரும் வளம் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்கின்றது. மாணவர்களின் ஆற்றல்கள் மழுங்கடிக்கப்படுகின்றன.

பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி மாணவர்களுக்கு பல ஆண்டுகளாக செயல் முறை மூலம் கற்பிக்கப்படுவதில்லை. தொழில்நுட்பப் பாடங்களுக்குப் பதிலாக வர்த்தகம் கற்பதிலேயே மாணவர்கள் நாட்டம் காட்டுகின்றனர். உயர்கல்வி வாய்ப்பு உள்ளதால் ஆரம்பக்கல்வியில் மாணவர்கள் ஆக்கத்திறன் வளர்க்கப்படுவது அருகியே காணப் படுகின்றன. பரீட்சைக்குப் புள்ளி வழங்குவதற்கான ஆக்கங்கள் வீட்டில் உள்ளவர்களாலேயே தயார் செய்யப்பட்டு பாடசாலைகளுக்கு எடுத்து வரப் படுகின்றன. இவ்வாறான சூழலில் எவ்வாறு மாணவரிடையே திறன்களை விருத்தி செய்ய முடியும்? பாடசாலையில் மரவேலை கற்றலால் வாழ்க்கையிலும் அதனையே தொழிலாகக் கொள்ள வேண்டும் என்ற நிலை இல்லாதிருந்தும் அதனைக் கற்க விரும்புகிறார்கள் இல்லை. மரவேலையைத் தொழில்நுட்ப

பாடமாகக் கற்கும்போது பெறப்படும் திறன்கள், வேலை ஒழுங்கு முறைகள், தொழிற் கூடத்தின் துப்பரவு ஒழுங்கமைப்பு என்பன அவர்கள் பெரியவர்களாகி எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் அவர்கள் சிறந்து விளங்குவதற்கு அடிகோலும் என்பதை மறந்து செயற்படுகின்றார்கள். விவசாயத்தைத் தொழில்நுட்பப் பாடமாகக் கற்றால் விவசாயியாகவே இருக்க வேண்டும். என்ற நிலை இல்லை. அவன் பெறும் அனுபவங்கள் அவன் எதிர்காலத்தில் பொறுப்பான பதவி வகிக்கும்போது தீர்மானங்களை எடுப்பதற்கு உதவும் எனச் சிந்திப்பவர்கள் ஒரு சிலரே. ஆகவே தொழிற்கல்வி பற்றி எல்லோரிடமும் நல்லமனப்பாங்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகளில் அனுமதி பெறும் மாணவர்களில் இரண்டு சதவீதத்தினரே பல்கலைக்கழக வாயில்களை எட்டிப் பிடிக்கின்றனர். ஆரம்பக்கல்வியைப் பூர்த்தி செய்யாது இடைவிலகுவோர், இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்யாது இடைவிலகுவோர், க.பொ.த.சாதாரண பரீட்சை எடுத்த பின் பாடசாலையை விட்டு நீங்குவோர், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பின் பள்ளி வாழ்க்கையை முடித்துக்கொள்வோர் என்பவர்கள் மிகுதி 98 % இல் அடங்குவார்கள். இந்த 98% மாணவர்கள் வேலை உலகுக்கு அடி எடுத்து வைக்கும்போதுதான் மலைக்கின்றார்கள். திறமைகள் இருக்கும், அவர்களின் திறமைக்குப் பொருத்தமான வேலைகள் இருக்கமாட்டாது. வேலை வாய்ப்புக்கள் இருக்கும், அதற்கு பொருத்தமான திறமைகள் இவர்களிடம் இருக்க மாட்டாது. ஆகவே பாடசாலை மட்டத்தில் அதாவது மாணவர்கள் பாடசாலையில் தங்கி வாழும் காலத்தில் அவர்களிடம் பொருத்தமான திறன்களையும், நல்மனப்பாங்குகளையும் விருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். இவற்றுக்கான வாய்ப்புக்கள் கல்வித்திட்டத்தில், பாடவிதானத்தில் இருந்தும் அவற்றினைப் பயன்படுத்த மாணவர்கள் தவறிவிடுகின்றனர். அவற்றினை பயன்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய மனப்பாங்கினை விருத்தி செய்வதற்கு பெற்றோர்களும், ஆசிரியர்களும், சமூகமும் முன்வருதல் வேண்டும்.

01. ஆரம்பக்கல்வி நிலையிலே ஆக்கத்திறன்களை விருத்தி செய்தல் வேண்டும்.

02. இடைநிலைக் கல்வி நிலையில் செய்முறை மூலம் விஞ்ஞானக்கல்வி, வாழ்க்கைத்திறன் கல்வி, தொழில்நுட்பக்கல்வி வழங்கப்படுதல் வேண்டும்.

03. அழகியற் கல்வியில் நாட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும். சங்கீதம்,நடன பாடங்களுடன் சித்திர பாடம் கற்பதற்கான நாட்டத்தினை ஏற்படுத்தல் வேண்டும்.

04. இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

05. ஆய்வுகூட, தொழிற்கூட வசதிகள்,உபகரண வசதிகளுடனும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் வேண்டும் .

06 தொடர் மதிப்பீட்டு முறை மூலம் அறிவுத்திறன், மனப்பாங்கு விருத்திக்கு வழிவகுத்தல் வேண்டும்.

07. கல்வி வழிகாட்டலுடன் தொழில் வழி காட்டலும் பாடசாலைகளில் இடம்பெற வேண்டும்.

08. தொழில் வாய்ப்புக்கள் பற்றியும், தொழில் வழங்குதலின் எதிர்பார்ப்புக்கள் பற்றியும் பாடசாலையில் கற்கும் காலத்திலேயே அறிவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

09. பாடசாலையை விட்டு விலகிய பின்னும் தொழில் பயிற்சிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் தொழிற் கல்வி மூலம் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளும் விஸ்தரிக்கப்படுதல் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக எத்தொழிலைச் செய்பவர்களும் தம்மைத் தாமே மதிப்பீடு செய்து, வினைத்திறனைக் கூட்டிக் கொள்வதற்கு ஏற்றவாறு மேலும் தம் திறன்களை விருத்தி செய்து உற்பத்தியைப் பெருக்கவும், நல்ல சேவையை வழங்கவும் முயற்சிக்கும் மனப்பாங்கு அவசியமாகும்.

# ஆசிரியர் மன அழுத்தமும் மன வேதனையும்

மா.கருணாநிதி M.A Edu.
விரிவுரையாளர்
கொழும்பு பல்கலைக்கழகம்

ஆசிரியர் மன அழுத்தத்திற்குள்ளாதல், மன வேதனையடைதல் என்னும் எண்ணக்கரு தொடர்பான ஆராய்ச்சிகள் கடந்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களாக உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் பல்வேறு உயர்தொழில்களிலும் உள்ளதுபோன்று ஆசிரியர் தொழிற்றுறை சார்ந்தும் இத்தகைய ஆய்வுகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. கல்விச் செயற்பாடுகளிலே பாடஏற்பாடுகள், கற்பித்தற் தொழில்நுட்பங்கள், பயன்படுத்தும் சாதனங்கள் என்ற வகையில் புதிய அறிமுகங்கள் நிகழும்போது அவற்றை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு பாடசாலைகளுக்கு விடப்படுகின்றது. சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள், தேவைகளுக்கு ஏற்ப இவை பூர்த்தி செய்யப்படா விட்டால், பெரிதும் குறைகூறப்படுபவர்கள் ஆசிரியர்களாவர்.

''ஆசிரியர்கள் சமூகமயமாக்கத்தின் முகவர்கள், எதிர்காலச் சந்ததியினரைச் சிறந்த முறையில் உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு என்ற நம்பிக்கையிலேயே அவர்களிடம் பிள்ளைகளை ஒப்படைக்கிறோம்.'' எனப் பெற்றோர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இத்தகைய பெரும் பொறுப்பையேற்றுப் பணிகளில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்களைப் பல பாடசாலைக் காரணிகளும் பிற காரணிகளும் பாதிப்பதனால் உண்டாகும் பொருத்தமற்ற சூழல் அவர்களுடைய உடல்,உளம் மற்றும் மனவெழுச்சிகளைப் பாதித்துவருகின்றன. இத் துரதிஷ்ட நிலை காரணமாக ஆசிரியர்கள் மனவேதனையடைந்து உற்சாகமிழத்தல் ஒரு பொது நிகழ்வாகவுள்ளது. இவற்றின் விளைவு கற்பித்தலை மட்டுமன்றி பாடசாலையின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் பாதிக்குமெனக்கொள்ள இடமுண்டு. மனஅழுத்தம், மனவேதனை என்பன ஒருவருடைய பணியுடன் தொடர்புடைய குறைபாடு என்றும் இக் குறைபாடு பல உள்ளிடுகைக்கும் வெளியிடுகைக்கும் இடையேயுள்ள அதாவது தனிப்பட்டவர்களின் முயற்சிக்கும் அதன்மூலம் கிடைக்கும் பலாபலன்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளால் தோன்றுகின்றன என்றும் விளக்கமளிக்கின்றனர். இந்த எண்ணக்கரு பற்றிய ஆராய்ச்சிகளில் 1960, 1970 களில் ஈடுபாடு காட்டிய ஆய்வாளர்களுள் ஹேபேர்ட் புராய்டன் பேகர் (HERBERT FREUDENBERGER) மாஸ்லாக் (MARSLACH) சேர்னிஸ் (CHERNISS) சார்சன் (SARSON)போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுடைய ஆய்வு முயற்சிகள் உளவியல்,சமூகவியல் மற்றும் வரலாற்று அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன. அண்மைக்காலங்களில் பாடசாலை ஆசிரியர்களின் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிகளில் ஈடுபாடு காட்டியோர் என்ற வகையில் கிறிஸ் கிறியாச்சூ (CHRIS KYRIACOU ) பிராட் (PRATT) பொண்ட் (PONT) பார்பர் (FARBER) கிறீமர் (KREMER) ஹொவ்மன் (HOFMAN) போன்றோர் முக்கியமானவர்களாவர்.

இவர்களுடைய ஆய்வுகளிலிருந்து மன அழுத்தம் மனவேதனை சார்பான பிரச்சினைகள் கடந்த காலங்களிலும் ஆசிரியர்களிடையே நிலவிவந்துள்ளது. ஆயினும் அப் பிரச்சினைகளை அவர்கள் வெளிப்படுத்திய விதம் வேலைகளில் திருப்தியின்மை மற்றும் உற்சாகம் குன்றுதல் என்ற வகையிலேயே இருந்தன.

அக்காலத்தில் ஆசிரியர் பணி பெருந்தொகையான மாணவர்களுக்குக் கற்பித்தலும் அவர்களை ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையவர்களாக வைத்திருத்தலும் என்றே சமூகம் கருதியது. இன்றைய சமுதாயத்தின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் விரிவடையும்போது ஆசிரியர் அனுபவிக்கும் பிரச்சினைகளும் கஷ்டங்களும் அதிகரிக்கின்றன. புதிய வடிவத்தைப் பெறுகின்றன. அதனால் மன அழுத்தம் மன வேதனைகளை வேறு வழிமுறைகளிலே வெளிப்படுத்த முற்படுகின்றனர்.

பாடசாலை இடைவேளையின்போது அல்லது பலர் ஒன்றுகூடிப்பேசும் வாய்ப்புகள் கிடைக்கும்போது மாணவர் பிரச்சினைகள், மாணவர்களால் தமக்கு ஏற்படும் பிரச்சினைகள், பாடசாலை நிருவாகம், ஆசிரியர் தொழிலைத் தேர்ந்து கொண்டமையால் தமக்கு ஏற்படும் நன்மை தீமைகள், இழப்புகள், தமது எதிர்காலத் திட்டங்கள்,மனவெழுச்சிகள் என்ற விடயங்கள் பற்றித் தமக்குள்ளே பேசுவதை நாம் அவதானித்து வருகின்றோம். இதனால் ஆசிரியர்களது மனப்போக்குகள் ஓரளவுக்குப் பகிரங்கப்படுத்தப்படும் நிலைக்குள்ளாவதையும் பிரச்சினையின் தன்மைகள் அவற்றின் காரணங்களை அறியக்கூடியதாக உள்ளமையையும் நாம் காண்கிறோம்.

மன அழுத்த, மனவேதனைப் பிரச்சினைகளுக்கு ஆசிரியர்கள் எல்லோரும் உட்படுகின்றனரா என்னும் வினாவும் எழுகின்றது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின்படி ஏறக்குறைய 25 சதவீதம் தொடக்கம் 35 சதவீதம் வரையில் பிரச்சினைக்குட்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கற்பிக்கும் வகுப்பு, வயதுமட்டம் என்பவற்றைப் பொறுத்துப் பிரச்சினையின் தன்மை வேறுபடலாம். மேலும் 40 வயதுக்கு உட்பட்டவர்களும், பெண்களிலும் பார்க்க ஆண்களே கூடுதலாகப் பாதிக்கப்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

20 அல்லது 30 வயதுகளில் உள்ள ஆசிரியர்கள் இத்தொழிற்றுறையில் தனித்துவத்தைப் பெறும்நோக்கில் மிகவும் உற்சாகத்துடன் ஈடுபடும்போது வேலைச்சூழல் திருப்தியற்றபோது அவர்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறாவிட்டால் விரைவில் மனச்சோர்வடைந்து விடுவர்.

ஆசிரியர்கள் அனுபவிக்கும் மகிழ்ச்சியற்ற சூழல், மனவெழுச்சிகள், விரக்தி, பதட்டம், கோபம் போன்றவையெல்லாம் அவர் ஆற்றும் பணிகள் வாயிலாகவே எழுகின்றன என்பது ஒரு புறமிருக்க ஆசிரியருடைய தனிப்பட்ட காரணங்கள் சமூகக் காரணங்கள் மற்றும் நிறுவன ரீதியான காரணங்களும் இவற்றிற்குத் துணையாகின்றன. பாடசாலைகளிலே கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டும் என முன்வைக்கப்படும் பணிகளுள் குறிப்பிட்ட சில பணிகளை நிறைவேற்ற முடியாமற்போதல் ஆசிரியர்களை எப்பொழுதும் அச்சுறுத்திவருகிறது. இத்தகைய வேலைப்பழு தம்மாலோ அல்லது ஏனையவராலோ சுமத்தப்படலாம். அப்பணிகளை நிறைவேற்றக்கூடிய தகுதி தம்மிடம் இல்லையே என்பதையிட்டும் அவர்கள் பயப்பட நேரிடுகின்றது. இன்றைக்கு ஆசிரியர் தொழிலில் சேர்ந்து கொண்ட கணிசமான தொகையினர் உரியகாலத்துக்கு முன்னரே சேவையிலிருந்து ஓய்வுபெற விரும்புகின்றனர். அல்லது ஆசிரியர் தொழிலைவிட்டு வேறுதொழில்களில் சேரவிரும்புகின்றனர். அல்லது தாம் அனுபவிக்கும் மன அழுத்தம் விரக்தி போன்றவற்றை ஈடுசெய்யச் சம்பள அதிகரிப்பைக்கோரி வருகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆராய்ச்சியாளர் பலர் ஆசிரியர்களின் கருத்தையறிய முற்பட்டபோது பெரும்பாலான ஆசிரியர்கள் தாம் உளரீதியாகப் பாதிக்கப்பட்டமையாலேயே மேற்கூறிய முடிவுகளுக்கு இட்டுச்செல்லப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். ஏனைய உயர்தொழில் புரிவோரோடு ஒப்பிடுகையில், இவ்வாறான பிரச்சினைகளைத் தெரிவிப்போர் பலரும் ஆசிரியராக உள்ளனர். ஆயினும் ஏனைய உயர்தொழில்களில் ஈடுபடுவோர் உளப்பிணிகளுக்கு உட்படுவதுபோல ஆசிரியர்கள் மன அழுத்தம் காரணமாக அவ்வளவுதூரம் பாதிக்கப்படுவதில்லை என்றும் அறியக்கூடியதாக உள்ளது. இன்னொரு வகையிலே ஆசிரியர்கள் சிலர் தாம் அதிக வேலைப்பழுவுக்கு உட்படும் வேளையிலும் தமது பணியில் திருப்திகாண்பதாகத் தெரிவித்தும் வருகின்றனர்.

கற்பித்தல் கடமையில் ஒழுங்காக ஈடுபடுவதால் ஏனைய காரணிகள் வாயிலாக வரக்கூடிய மன அழுத்தங்களைக் கட்டுப்படுத்த முடியுமெனக் கருதுகின்றனர்.

வேறுசிலர் தமது மனநிலை முரண்பாடுகளில் பணிகளில் செலுத்தவேண்டிய காலத்தையும் சக்தியையும் குறைத்துக்கொள்ள முற்படுகின்றனர். இந்தவிதமான போக்கு ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கத் தூண்டும் எனலாம்.

எமது பாடசாலைகள் பலவற்றிலே ஆசிரியர் பற்றாக்குறையுண்டு. இதனிடையே கணிசமான தொகையினர் பாடசாலைக்கு வருகைதராமலிருத்தல் பாரியதொரு பிரச்சினையாகும். பல்வேறு தனிப்பட்ட மற்றும் சமூகக் காரணங்களுக்காக ஆசிரியர்கள் பாடசாலைக்கு வராமலிருப்பதால் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுதல் கூடும் என்பது ஒருபுறமிருக்க மறுபுறத்தில் தமது மனவேதனையைக் குறைக்க லீவு எடுத்தல் ஓரளவுக்கு உதவும் என்றும் எண்ணுகின்றனர். இந்த ஆசிரியத் தொழிலை விட்டுச் சென்றால் என்ன என ஆசிரியர்கள் சமூகந்தராமை விடையாக அமையும் என்ற சிந்தனைப்போக்கும் அவர்களிடம் உண்டு. பாடசாலைக் காலங்களில் தாம் படும் அவஸ்தையின் காரணமாக அவற்றிலிருந்து விடுபட அதிகமான லீவு அவசியமாக எதிர்பார்ப்பதும் சாத்தியமானதே. ஆயினும் எமது நாட்டிலே ஆசிரியர்களுக்கு அதிகமான விடுமுறை நாட்கள் உள்ளன என்ற குற்றச்சாட்டும் பலமாகவுள்ளது.

ஆசிரியர் மன அழுத்தம் மனவேதனையைத் தோற்றுவிக்கும் ஏனைய காரணிகளுள் அவர்களது சுயகௌரவம், தன்னடைவுத் தேவைகள், பணிக்கும் தகமைக்கும் தேர்ச்சிக்குமிடையேயுள்ள வேறுபாடு, ஆசிரியத்தொழில் பற்றிய தனிப்பட்ட கருத்து, தன்னம்பிக்கையும் ஆற்றலும் என்பனவும் அடங்கும். இவற்றைவிட நிறுவனரீதியான காரணிகளே முக்கியத்துவம் வாய்ந்தவை. பாடசாலையில் ஆசிரியர் ஏற்கும் பாத்திரம், ஆளணியினரிடையே நிலவும் தொடர்புகள் குன்றிப்போதல், வகுப்பறைக் கட்டுப்பாடு சீர்குலைதல், மாணவர்கள் செய்யும் குழப்பங்கள் வரம்பை மீறிப்போதல், மாணவர்களைக் கட்டுப்படுத்த முற்படும் வேளையில் எதிர்பார்ப்புகள் தோல்வியடைதல், போன்ற சந்தர்ப்பங்களில் மனவேதனையும் அதிகரிக்கும்.

மற்றும் பாடசாலை நிருவாக அமைப்பிலுள்ள ஒழுங்கீனம், பொருத்தமற்ற பணிகளை ஒருவருக்கு ஒப்படைத்தல், எதிர்பாராத இடமாற்றங்கள், உத்தியோக உயர்வுக்கான வாய்ப்புகள் குறைவாகக் காணப்படல் முதலியன அவற்றுள் பிரதானமானவை. சமூகக் காரணிகள் என்றவகையில் கவனமும் பொறுப்புமின்றி நடந்துகொள்ளும் பெற்றோர், ஆசிரியர் பொறுப்புவாய்ந்தவர் என்ற பொதுவான எதிர்பார்ப்பில் உண்டாகும் முரண்பாட்டினால் ஏற்படும் பாதிப்புகள் பொதுமக்களின் விமர்சனம், தொழில் அந்தஸ்து குன்றிப்போதல் என்பனவும் அடங்கும்.

எவ்வாறாயினும் ஆசிரியர்களிடையே தோன்றக் கூடிய பிரச்சினைகள் மாணவர் முன்னேற்றத்தையும் பாடசாலை நடவடிக்கைகளையும் பாதிக்கக் கூடாது. வகுப்பறையில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை ஏற்படுத்தும் பக்குவமுடையோராகவும் பாடப்புறச் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவராகவும் இருத்தல் நல்லது. பாடசாலையில் அவர் பல்வேறு பாத்திரங்களையும் ஏற்கும்போது, சக ஆசிரியர்களின் ஆதரவையும் நண்பர்கள் சமுதாயம் ஆகியவற்றின் ஒத்துழைப்பையும் பெறத்தக்க சூழ்நிலை உருவாகும் வகையில் தம்மை மாற்றிக்கொள்ள முயற்சியெடுத்தல் இன்றியமையாதது. சமுதாயத்தின் ஆதரவைப்பெற பாடசாலை நிருவாகம் இடமளிக்காவிட்டால் பல பிரச்சினைகள் தோன்ற இடமுண்டு. பிறநாடுகளிலே ஆசிரியர்கள் தமது மனவேதனை, மனஅழுத்தம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த உளவியல் சார்ந்த ஆலோசனைகளை நாடுவதுமுண்டு. வயது முதிர்ந்த அனுபவமிக்க ஆசிரியர் மன அழுத்தத்திற்கு உட்படுவது குறைவு.

இலங்கையிலே தற்பொழுது ஏறக்குறைய 10,000 பாடசாலைகளையும், 43 இலட்சம் மாணவரையும் 187,000 ஆயிரம் ஆசிரியரையும் கொண்ட பாரிய கல்வியமைப்புக் காணப்படுகிறது. இவ்வமைப்பிலே பௌதீக மற்றும் ஆளணி வளங்களில் பிரதேச ரீதியான வேறுபாடுகள் உள்ளன. இவை பாடசாலைகளின் அடைவுமட்டத்தைப் பாதிக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரை கல்விச் செயற்பாடுகளில் இடம்பெறக்கூடிய மேம்பாடுகள் ஆசிரியர் கையிலும் தங்கியுள்ளது.

மன அழுத்தம் மற்றும் மன வேதனை என்ற விடயம் பற்றிய ஆராய்ச்சிகள் இலங்கையில் இன்னும் பரவலாக மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் எடுத்துக் காட்டப்பட்ட காரணங்கள் இலங்கை ஆசிரியர்களுக்கும் பொருந்தும். இங்கு நகரப் பிரதேச ஆசிரியர்களிலும் பார்க்க கிராம மற்றும் உள்ளூர்ப்பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், போதிய வளவசதிகள் நிருவாகச் சீர்கேடுகள், தகுந்த பயிற்சியின்மை, பதவிஉயர்வுக்கான சந்தர்ப்பக் குறைவு, பெற்றோர் காட்டும் ஈடுபாடு ஆதரவு என்பனவற்றின் போதாமை, எதிர்பாராத இடமாற்றங்கள், சமூக மதிப்புக் குன்றிப் போதல் முதலிய காரணங்களால் அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றனர். தற்பொழுது ஆசிரியர் தொழிலை ஓர் உயர் அந்தஸ்துடைய தொழிலாக மாற்ற வேண்டும் என்ற எண்ணக்கரு புத்துயிர்ப்புப் பெற்றுவருகின்றது. ஆசிரியர்கள் தமது தொழில் ஒழுங்கு சார்ந்த நடவடிக்கைகளில் தெளிவான விளக்கமும் நோக்கமும் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதே உயர் தொழில் மயமாக்கலின் நோக்கமாகும். போதனாமுறைத் திட்டமிடல்,கற்பித்தல் முறைகள், தொழில்நுட்ப வளங்கள் போன்றவற்றை வழங்குவதற்கு முன்னர் ஆளுமை மற்றும் சமூக ரீதியாக ஆக்கபூர்வமான அறிவை வழங்குவதன் மூலமே உயர் தொழில் அந்தஸ்திற்குரிய அம்சங்கள் நிறைவுபெறும். இதற்குரிய பயிற்சியை வழங்கும் சந்தர்ப்பங்களில் மன அழுத்தம் மன வேதனைகளைக் கட்டுப்படுத்தக்கூடியதாகத் தனியாள், நிருவாக மற்றும் சமூக நோக்கில் ஆசிரியரை அணுகுதல் நன்மைதரும் எனக் கூறலாம்.


1) COLIN RICHES AND COLIN MORGAN. HUMAN RESOURCE MANAGEMENT IN EDUCATION. OPEN UNIVERSITY PRESS - PHILADELPHIYA 1992.

2) SANDRE H. STRESS MANAGEMENT FOR TEACHERS. EDUCATIONAL PUBLISHERS LTD. LANCASTER -1990

3) BARRY A.FARBER. CRISIS IN EDUCATION STRESS AND BURNOUT IN THE AMERECAN TEACHER. JOSSEY - BASS PUBLISHERS SAN FRANCISCO. OXFORD - 1991.

4) TORSTEN HUSEN; NEVILLE POSTLETHWAITE. THE INTERNATIONAL ENCYCLOPEDIA OF EDUCATION SECOND EDITION; PERGAMON- 1994.


" முகம் பார்க்கும் கண்ணாடியை அது என்ன என்று எடுத்துக் கொண்டு ஆராயப் புகுந்தோமானால் கடைசியில் அதில் பட்டு விழுகின்ற பொருட்களை வந்தடைகின்றோம், அப்பொருட்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தோமானால் கடைசியில் அந்தக் கண்ணாடியை மட்டுமே வந்தடைகிறோம். அறிவு என்பதன் வரலாறு அமைந்திருப்பதே பொதுவாக இப்படித்தான்."

- ஃப்ரைட்ரிக்ஹ் நீட்ஷே -

" தத்துவவாதி எனப்படுபவன் வார்த்தைக்கூட்டங்களால் வர்ணம் பூசும் தொழிலாளி. அவ்வளவுதான். அதாவது, வார்த்தைகளில் வார்த்தைகளைக் கொண்டு விடையாடுபவன். அவற்றுக்கான இடைவெளிகளை மீறுபவன். இந்த விளையாட்டினூடே அவன் செய்து காட்டுவது சொல்லாடல் களங்களில் உறைந்திருக்கும் அதிகார இயக்கத்தைப் பிரித்துப்போடுவதைத்தான்."

- ழான் - ப்ரான்ஸுவா -

# திருகோணமலை மாவட்டத்தின் கல்வி நிலை

**கே.திலகரட்ணம்** B.Com.(Hons.), B.phil.(Hons.), Dip. in Edu., Dip.in Edu. Man. SLEAS
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித்திணைக்களம்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

இம்மாவட்டம் ஏறத்தாழ 252 இரு மொழிப் பாடசாலைகளையும் 3500 நிரந்தர, 60இடம்பெயர்ந்த ஆசிரியர்களையும், 86,500 நிரந்தர 462 இடம்பெயர்ந்த மாணவர்களையும், ஆளணிவளங்களாகக் கொண்ட ஒரு பன்மொழிக் கல்வி மாவட்டமாகும். இது கந்தளாய், சேருவில, கோமரங்கடவல, பதவிசிறிபுர, மொரவெவ ஆகிய சிங்கள மொழிப் பாடசாலைகளை அதிகமாகக் கொண்ட கல்விக் கோட்டங்களையும், ஈச்சிலம்பற்று, மூதூர், திருகோணமலை, குச்சவெளி, தம்பலகமம், கிண்ணியா ஆகிய தமிழ்மொழிப் பாடசாலைகளை அதிகமாகக் கொண்ட கல்விக் கோட்டங்களையும், ஈச்சிலம்பற்று, மூதூர், திருகோணமலை, குச்சவெளி, தம்பலகமம், கிண்ணியா ஆகிய தமிழ் மொழிப் பாடசாலைகளை அதிகமாகக் கொண்ட கோட்டங்களையும், வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தையும், மாகாண கல்வி அமைச்சையும் கொண்டதொரு மாவட்டமாகும். இங்குள்ள பாடசாலைகளின் விபரங்களைக் கோட்ட, மொழி, இன ரீதியில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**பாடசாலைகளின் விபரங்கள்**

| கோட்டம் | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் |
|---|---|---|---|
| திருகோணமலை | 11 | 22 | 07 |
| குச்சவெளி | 03 | 09 | 09 |
| தம்பலகமம் | 05 | 07 | 09 |
| கிண்ணியா | – | 03 | 32 |
| மூதூர் | 02 | 29 | 20 |
| ஈச்சிலம்பற்று | – | 15 | – |
| கந்தளாய் | 15 | 02 | 06 |
| சேருவில | 09 | – | – |
| கோமரங்கடவல | 11 | – | – |
| மொரவெவ | 09 | 06 | 01 |
| பதவிசிறிபுர | 10 | – | – |

இக்கோட்டங்களில் கிண்ணியா கோட்டத்தில் தனித்து தமிழ் மொழிப் பாடசாலைகளும், ஈச்சிலம்பற்று கோட்டத்தில் தனித்து தமிழ் பாடசாலைகளும்,சேருவெல, கோமரங்கடவெல, பதவிசிறிபுர கோட்டங்களில் தனித்து சிங்களப் பாடசாலைகளும் காணப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலே குறிப்பிட்ட கோட்டங்களில் திருமலைக் கோட்டம் தவிர்ந்த ஏனைய கோட்டங்கள் கல்வி அபிவிருத்தியில் பின்தங்கிய கோட்டங்களாகக் காணப்படுகின்றன.

ஒரு மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியின் வெற்றி அம்மாவட்டங்களிலுள்ள கோட்டங்கள் கூட்டு மொத்தமாக அபிவிருத்தி பெறும் பட்சத்தில்தான் பெறப்படும் என்பது உண்மை. ஒவ்வொரு கோட்டங்களின் அபிவிருத்தி அங்கு பெறப்படும் மனித, பௌதீக, நிதி வளங்களின் கிடைப்புத் தன்மையிலும், அவற்றினை முகாமைப்படுத்தும் திறனிலுமே தங்கியுள்ளது. இங்குள்ள கோட்டங்களின் வளப்பங்கீடானது அசமந்த நிலையில் காணப்படுவதும்,கல்வி முகாமைத்துவத்தின் பின்னடைவும் இக்கோட்டங்களின் அபிவிருத்தி பின்னடைவுக்கு காரணம் எனக்கூற முடியும். இதற்கான காரணங்களை பின்வரும் அட்டவணையில் உள்ள புள்ளி விபரங்களை அவதானிப்பதன் மூலம் ஊகித்து உணர முடியும்.

ஆசிரிய மாணவ, அதிபர் விபரங்கள் (கோட்ட ரீதியாக)

| கல்விக் கோட்டம் | பாடசாலைத் தொகை | ஆசிரியர் தொகை | ஆசிரியர் பற்றாக் குறை | மாணவர் தொகை | மேலதிக அதிபர்கள் | கடமை புரியும் தரமற்ற அதிபர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1.ஏச்சிலம்பற்று | 15 | 56 (56) | 75 | 2672 (2342) | 06 | −09 |
| 2.மூதூர் | 51 | 647 (609) | 275 | 16755 (14940) | 44 | −07 |
| 3.திருகோணமலை பட்டினம் சூழல் | 40 | 892 (780) | 152 | 22389 (16288) | 53 | +13 |
| 4.குச்சவெளி | 21 | 226 (232) | 62 | 4543 (3838) | 15 | −06 |
| 5.தம்பலகமம் | 21 | 213 (216) | 105 | 6644 (4434) | 17 | −04 |
| 6.கிண்ணியா | 35 | 524 | 235 | 15631 (13683) | 27 | +08 |
| 7.கந்தளாய் | 23 | 516 (447) | 61 | 11873 (14421) | 21 | −02 |
| 8.சேருவில | 09 | 131 (127) | − | 2206 (2052) | 05 | −04 |
| 9.கோமரங்–கடவெல | 11 | 95 (87) | − | 1351 (1524) | 06 | −05 |
| 10.பதவிசிறிபுர | 10 | 170 (109) | − | 2927 (2771) | 09 | −01 |
| 11.மொறவெவ | 16 | 92 (85) | 7 | 1103 (1061) | 06 | −10 |

( ) வன்செயலினால் இடம்பெயர்ந்ததன் பின்னுள்ள விபரங்கள்

− பற்றாக்குறையான அதிபர்கள் (தரமுள்ளவர்கள்)

\+ மேலதிகமான அதிபர்கள் (தரமுள்ளவர்கள்)

மேலே தரப்பட்ட விபரங்களின் அடிப்படையில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் இடம்பெயர்தலினால் தமிழ் மொழிக் கோட்டத்தைச் சேர்ந்த ஆளணியினர்கள் திருகோணமலை நகர்ப்புறம் நோக்கி நகர்தலையும், சிங்களக் கோட்டங்களிலுள்ள ஆளணியினரும் திருகோணமலைக் கோட்டங்களிலுள்ள ஆளணியினரும் ஆசிரியர்களும் மாணவர்களும் கந்தளாய்க் கோட்டம் நோக்கி நகர்வதனையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று மேலதிகமான தரமுள்ள அதிபர்கள் 13பேர் திருமலைக்கோட்டம் நோக்கி நகர்வதையும் ஏனைய பின்தங்கிய கோட்டங்களில் தரமுள்ள அதிபர்களுக்குப் பற்றாக்குறையும் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. திருமலைக்கோட்டத்தில் அதிகளவிலான சிங்களமாணவர்களின் பெயர்வினாலும் சிங்கள ஆசிரியர்களின் பெயர்வினாலும் பற்றாக்குறை நிலவுகின்றது. இவற்றின் அடிப்படையில் கோட்டங்களுக்கிடையே வளங்களின் அசமந்த நிலையை ஓரளவு ஊகித்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

இதன் அடிப்படையிலேயே இன்று இக்கோட்டங்களின் கல்வி நிலை பின்னடைந்து காணப்படுகின்றது. ஒருபாடசாலையின் அபிவிருத்தி மாணவர், சமூகம், ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரிகள், அரசியல்வாதிகள், போன்றவர்களினால் நிர்ணயிக்கப்படுகின்றது. கலவரங்களின் பின் கிராமப்புறக்கோட்டங்கள் இந்த வளப்பங்கீட்டினைப் பெறுவதில் கஸ்டங்களை அனுபவித்துள்ளன. முதற் தர முகாமையாளர்களான தரமுள்ள அதிபர்கள், வளமுள்ள பெற்றோர்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள் போன்றவர்களின் நகர்வும் கிராமியக் கோட்டங்களின் கல்விப் பின்னடைவுக்கு ஒரு காரணமாகின்றது. இதனால் ஆசிரியர், மாணவர் விகிதம் கிராமப்புறக்கோட்டங்களில் 47.7% ஆனோர் நகர்ப்புறக் கோட்டத்தில் 24.2% ஆனோராகக் காணப்பட்டு நகர்ப்புறத்தில் கற்றலுக்கான ஆசிரிய வள ஆளணியினரின் வாய்ப்பினை ஏற்படுத்தியது.

கீழ் வாழும் கிராமப்புற பெற்றோர்களின் பிள்ளைகள் அங்கு கலைப்பாடங்களைக் கற்க கிராமப்புறங்களிலுள்ள வருமான மட்டம் உயர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகள் நகரம் சென்று ஏனைய துறைகளைக் கற்று பல்கலைக்கழகம்

புகுவதை அண்மைக்காலங்களில் உணர முடிகிறது. அதுமட்டுமன்றி இக்காலங்களில் பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம், ஒதுக்கப்பபட்ட நிதி ஒதுக்கீடுகள் கூட செயற்படுத்த முடியாத நிலையில் நகரங்களில் குவிக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தின் நிமித்தம் நகரப் பாடசாலைகள் கூடிய வளங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இது போன்ற காரணிகள் வளங்களின் அசம நிலைக்கு வித்திட்டது எனக் கூறலாம்.

க.பொ.த். (உ.த) கற்பிக்கும் ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் 45பேர் நகரக் கோட்டத்தில் மேலதிகமாகவும், கிராமக் கோட்டங்களில் பற்றாக் குறையாகவும் காணப்படுகின்றனர். அத்துடன் இங்கு பிரபல்யம் பெற்ற பாடசாலைகளில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய வகுப்புகளுக்கு போதிய ஆசிரியர்கள் உள்ளனர். கிராமப்புறங்களில் உள்ள 1சி பாடசாலைகளில் வர்த்தகம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் போதாமல் உள்ளனர். நகரப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர்கள் கணக்கெடுப்பின் போது அதிபர்களால் பல்வேறு சேவைகள் செய்பவர்கள் என சுட்டிக் காட்டப்படுகின்றனர்.

கிராமப்புறங்களில் பாடவிதானத்தைச் சிறப்புற அமுல்படுத்துவதற்குத் தேவையான (கணிதம், வர்த்தகம் விஞ்ஞானம், அழகியல் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு) ஆசிரியர்கள் பற்றாக்குறையாக காணப்படுகின்றனர். ஆனால் இதே வகையான ஆசிரியர்கள் நகர்ப்புற பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் மிகையாகவும், மேலதிகமாகவும் காணப்படுகின்றனர். இதனால் கல்வியில் சமவாய்ப்பு என்ற தத்துவம் மீறப்படுவதனால் மாணவர்கள் க.பொ.த.(சா.த), க.பொ.த(உ.த) போன்ற பரீட்சைகளில் மிகவும் குறைவாகவே சித்தியடைகின்றனர். சித்திபெறுபவர்களும் க.பொ.த(உ.த) வகுப்புகளில் கலைப் பாடத்தை அப்பிரதேசங்களில் கற்பதற்கு ஓரளவு வசதி காணப்படுவதனால் வருமான மட்டம் கல்வி மட்டத்தை நிர்ணயிப்பது என்பதற்கு இணங்க கலைப்பாடங்களைக் கற்பதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர்.

கல்வியில் புதிய பாதை, கல்வி வெள்ளையறிக்கை போன்ற கல்விச் சீர்திருத்த ஆலோசனைகளில் கல்வியில் சமவாய்ப்பு என்றஎண்ணக்கரு வலியுறுத்தப்பட்டபோதும் ஆசிரியர் பற்றாக்குறை, ஆய்வுகூட வசதியின்மை, தொழிற்கூடப் பற்றாக்குறை போன்ற காரணிகளால் வருமானக் கோட்டின ல இங்கு பெற்றோர்களின் சமூக மட்டம் கல்வி மட்டத்தை உயர்த்துகின்றது என்பதும் இதனால் சமூகப்பெயர்வு ஏற்பட்டுக் கிராம பெயர்வு ஏற்படுவதற்கும் வழிவகுக்கின்றது என்பதும் உண்மையே.

கிராமப்புறக் கல்விக் கோட்டங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்களில் பெரும்பாலானோர் பாதுகாப்பின் நிமித்தம் பெரும்பாலும் அப்பகுதியில் நிரந்தரமாக இருந்து கடமைபுரிய விரும்புவதில்லை. கடமைபுரிபவர்களும் நகர்ப்பிரதேசங்களில் இருந்து அங்கு சென்று கடமைபுரியவே விரும்புகின்றனர். இதனால் போக்குவரத்து, பாதுகாப்புக் காரணங்களினால் உரிய நேரத்திற்கு அப்பிரதேசப் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. எனவே கற்பித்தற்செயற்பாட்டில் ஆசிரியர்களின் பங்கு குறைவாகக் காணப்படுகிறது. இதனால் போட்டிப் பரீட்சைகளுக்கும், ஏனைய பரீட்சைகளுக்கும் உரிய பாடத்திட்டங்கள் உரிய வேளையில் முடிக்கப்படுவதில்லை. சில பாடங்களில் பொருத்தமான ஆசிரியர்கள் இன்மையால் கற்பிக்கப்படுவதும் இல்லை. பொதுவாக ஆங்கிலம், சித்திரம், கணிதம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சேவைக்கால முதன்மை ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் போன்றோர் பாதுகாப்பு போக்குவரத்து காரணங்களின் நிமித்தம் இப்பாடசாலைகளைத் தரிசித்துப் பாடவிதான முகாமைத்துவம் சம்பந்தமான ஆலோசனைகள் வழங்குவது மிகமிகக் குறைவு. இதனால் இப்பிரதேசங்களின் புதிய பாடத்திட்டங்கள் புதிய தொழில்நுட்பப் பாடங்கள் பொருத்தமான முறையில் ஆசிரியர்களால் நடைமுறைப்படுத்தப்படாமல் காணப்படுகிறது. புதிய பாடவிதான அறிமுகங்கள், பாடத்திட்டங்கள் போன்றனவும் உரிய வேளைகளில் கிடைப்பது கஸ்டமாகக் காணப்படுவதால் மாணவர்களின் கல்வி அடைவை உயர்த்துவதில் பெரும் பிரச்சனைகளை அங்கு கடமைபுரியும் ஆசிரியர்களும், அதிபர்களும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இன்று மாணவர்களின் கல்வி அடைவைத் தீர்மானிப்பதில் பெற்றோர்கள், பாடசாலை, தனியார் ரியூசன் வகுப்புகள், தொடர்பு சாதனங்கள் என்பன முக்கியம் பெறுகின்றன. இன்றைய கல்வி அமைப்பு போட்டியின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதால் தனியார் ரியூசன் வகுப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் கிராமப்புற மாணவர்கள் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வதால் பாடசாலையை மட்டும் நம்பியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர். எனவே பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை முடிக்கின்ற பட்சத்தில்தான் அந்த மாணவர்களின் அடைவு மட்டத்தை நிர்ணயிக்க முடியும். இங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களில் திறமையுள்ள ஆசிரியர்கள் நகர்ப்புறத்திற்குச் சென்று ரியூசன் வகுப்புகளை நடாத்துவதன் மூலம் தமது கவனத்தை, தமது மாணவர்களை விட ரியூசன் வகுப்பு மாணவர்களில் கூடுதலாகச் செலுத்துவதனால் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

ஆசிரியர்கள் கற்று, கற்றுக்கொடுக்க வேண்டியவர்கள். இங்கு தாம் கற்பதற்குரிய வசதிகள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே தங்கள் புதிய விடயங்களை மாணவர்களுக்கு உடனுக்குடன் கொடுக்க முடியாத சூழல். தாம் கற்ற பழைய விடயங்களைக் கொடுப்பதும், புதிய கற்பித்தல் யுக்திகளைப் பயன்படுத்தாமல் இருப்பதும் தவிர்க்கமுடியாத ஒன்றாகக் காணப்படுகிறது. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் கல்வியின் அடைவு மட்டம் பின்தங்கிக் காணப்படுகிறது என்பதை நாம் மாணவர்களின் பெறுபேறுகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கிராமப்புறத்து மாணவர்கள் பின்னடைந்து காணப்படுகின்றனர் என்பதை க.பொ.த. (உ.த), புலமைப்பரிசில் பெறுபேற்றிலிருந்து அறிந்துகொள்ள முடியும். குச்சவெளி, மொறவேவா, தம்பலகமம் போன்ற கோட்டங்களிலிருந்து விஞ்ஞான, கணித பிரிவுக்கு மாணவர்கள் தோற்றவில்லை. ஏனைய பிரிவில் கலைப்பிரிவுக்கு தோற்றியவர்களும் மிகக் குறைவு.

கிண்ணியா, மூதூர், கந்தளாய் பிரிவுகளில் கலைப்பிரிவில் அதிகமாகவும், ஏனைய பிரிவுகளில் குறைவாகவும் மாணவர்கள் காணப்படுகின்றனர். நகரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்தோர் வீதம் கூடுதலாகவுள்ளது.

இதற்கான காரணம் ஆசிரியர்வளம்,பௌதீக வளம் என்பன நகரப்பகுதியில் காணப்படுவதும், கிராமத்திலுள்ள திறமையான,வசதி படைத்த மாணவர்கள் நகரத்திற்கு வருகை தருவதும் ஒரு காரணமாகும்.

## க.பொ.த.(உ/த) – 1995 திருகோணமலை மாவட்டம்

| கோட்டம் | குச்சவெளி | தம்பலகமம் | மொறவெவ | மூதூர் | கந்தளாய் | கிண்ணியா | திருகோணமலை |
|---|---|---|---|---|---|---|---|
| **கலைப்பிரிவு** | | | | | | | |
| தோற்றியோர் | | 60 | 11 | 539 | 522 | 72 | 1424 |
| சித்தி | - - | 52 | 08 | 460 | 411 | 68 | 1224 |
| சித்தியின்மை | - - | 08 | 03 | 79 | 111 | 04 | 200 |
| **வர்த்தகம்** | | | | | | | |
| தோற்றியோர் | 01 | | | 16 | 36 | 24 | 381 |
| சித்தி | 01 | | | 11 | 16 | 23 | 306 |
| சித்தியின்மை | | | | 15 | 20 | 01 | 75 |
| **உயிரியல்** | | | | | | | |
| தோற்றியோர் | | | | 08 | 19 | 06 | 156 |
| சித்தி | | | | 06 | 05 | 04 | 130 |
| சித்தியின்மை | | | | 02 | 14 | 02 | 26 |
| **கணிதம்** | | | | | | | |
| தோற்றியோர் | | | | 03 | | 12 | 68 |
| சித்தி | | | | 02 | | 06 | 66 |
| சித்தியின்மை | | | | 01 | | 06 | 02 |

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு - 1995 திருகோணமலை மாவட்டம்

| கோட்டம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தியடைந்த வீதம் |
|---|---|---|---|
| 1. குச்சவெளி | 152 | 06 | 3.94 |
| 2. கிண்ணியா | 1416 | 07 | 1.68 |
| 3. தம்பலகமம் | 368 | 05 | 1.25 |
| 4. சேருவில | 159 | 09 | 5.66 |
| 5. கந்தளாய் | 626 | 46 | 7.23 |
| 6. ஈச்சிலம்பற்று | 43 | - | - |
| 7. திருகோணமலை | 828 | 188 | 22.07 |
| 8. மூதூர் | 387 | 10 | 2.58 |
| மொத்தம் | 2989 | 271 | 9.06% |

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் 271பேர். அவர்களில் 188பேர் திருகோணமலை நகரில் காணப்படுகின்றனர். இது மாவட்டத்தில் 63.97% ஆகும். இந்நிலைக்கு பெற்றோரின் அக்கறையும், கிராமப்புற கல்வி கற்ற மக்களின் நகர்வும் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியும், பிரத்தியேக தனியார் வகுப்புக்களும், பாடசாலைகளில் நடாத்தப்படும் மேலதிக வகுப்புக்களும் வேறு மாவட்டங்களில் இருந்து பெறப்படும் வினாத்தாள்களைக் கொண்டு நடாத்தப்படும் பரீட்சைகளும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளும் காரணம் எனக் கூறப்படுகின்றது. சித்திபெறும் மாணவர்களில் பெரும்பாலானோர்கள் அரச ஊழியர்களின் பிள்ளைகள் எனக் கணிப்பீடுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. சகாயப் பண உதவி பெறும் மாணவர்களின் விகிதம் இப்பிரதேசத்தில் குறைவாகக் காணப்படுகிறது. கிராமக் கோட்டங்களிலிருந்து சித்தி பெற்ற மாணவர்களில் பெரும்பகுதியினர் சகாயப் பண உதவி பெறுபவர்களாவர். இந்நிலையினால் கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்தப் பரீட்சை கல்வியின் சமவாய்ப்பு என்ற தத்துவத்தில் இருந்து விலகிச் செல்வதாக உள்ளதென கல்வியியலாளர்கள் கூறுகிறார்கள்.

எனவே இதுபோன்ற பல்வேறு காரணங்களின் நிமித்தம் கோட்டங்களுக்கு இடையேயுள்ள சமவாய்ப்பு அற்ற நிலையைக் களைவதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம் ஓரளவு சமவாய்ப்பினை ஏற்படுத்த முடியும். அவையாவன,

1) ஆசிரியர் பற்றாக்குறையை உரிய முறையில் கணக்கிட்டு வகை ரீதியில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களை கால ஒப்பந்த அடிப்படையில் பின்தங்கிய பாடசாலைகளுக்கு மாற்றம் பெறச் செய்யலாம்.

2) விசேட பாடங்கள் கற்பிக்கக்கூடிய குறிப்பாக விவசாயம், மரவேலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், மனையியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களையும், பற்றாக்குறையான பாடசாலைகளையும் இனங்கண்டு அவர்களையும் கால ஒப்பந்த அடிப்படையில் பின்தங்கிய பாடசாலையை நோக்கி நகரச்செய்யலாம்.

3) பின்தங்கிய பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவுகளை வழங்குவதன்மூலம் ஆசிரியர்களை ஊக்குவிக்கலாம்.

4) நகர்ப்புற பிரதேசத்தில் மேலதிகமாக காணப்படுகின்ற தரமுள்ள அதிபர்களை இடமாற்றம் பெறச் செய்யலாம்.

5) மூடப்பட்ட பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களை அப்பாடசாலைகள் திறக்கப்படும் வரை திணைக்களங்களில் பணிபுரிவதை தடுத்து இப்பாடசாலைகளுக்கு அனுப்புவதன் மூலம் பற்றாக்குறையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிவர்த்தி செய்யலாம்.

# தயவு செய்து கவனியுங்கள்

– சு. வில்வரெத்தினம் –

புத்தகம் கண்முன்னே திறந்தபடி
குப்பிவிளக்கோ புகைகக்கிய படிக்கு.

பாவம் சிறுவன் இவன்

அடிக்கடி
கண்களைக் கசக்கிக்கொள்கிறான்
மீண்டும்
பார்வையை புத்தகத்தின் மீது
ஓடவிடுகிறான்.

பூ ச்சிகளாய் ஊர்கின்றான்

எழுத்துகள் பூ ச்சிகளாய்
மாறுவது எவ்விதம்?
சிறுவனுக்கு விளங்கவில்லை
பூ ச்சிகளாய் மாறிய எழுத்துகள்
கண்ணினுள் புகுந்து துடிக்கின்றன.

மீண்டும் கண்களைக் கசக்குகிறான்
குப்பி விளக்கின் புகையோ
கரிய பாம்பு வளையம் போல
எழுந்து அலைகிறது.
அறைமுழுவதும் எண்ணையின் நெடில்

சின்னக் கண்களினுள் வளர்கிறது காளான்
பார்வையில் பூ ஞ்சணம்

பென்னம்பெரிய வெளிகளை
அளாவத்துடிக்கிற விழிகள்
குறைவெளிச்சம் கொண்டு கருங்கியது.
பிள்ளை எரிச்சல்படுகிறான்
குப்பி விளக்கின் மீது
நானோ

தொடர்கின்ற இரவுகள் மீதும்
கந்தக நெடில் கனத்த நாட்களின் மீதும்
எரிச்சலுறுகிறேன்.

குப்பி விளக்கின் மீது
எனக்கேதும் வெறுப்பில்லை
குப்பி விளக்குகள் வரலாற்றில் ஏற்றிவைத்த
வெளிச்சங்களை அறிந்தவன் ஆதலால்.

ஆயினும்
என்னால் சீரணிக்க முடியவில்லை
சிறுவனின் கண்களுள் காளான் வளர்த்தவர்
எண்ணெய்க் குதங்களின் எரிபுகையில்
அணுக்குடைக் காளானை அடையாளம்
கண்டதாய்ச் சொல்வதைத்தான்.

எண்ணெய்க் குதங்களின்
துளிதேக்கிய
குப்பி விளக்கை
உங்கள் கையில் தருகிறேன்
இந்தச் சின்ன விழிகளுக்குள்
உற்று நோக்குகையில்
நீங்கள் அடையாளம் காண்பது எதனை?
தேசத்தின் விழிமுழுவதையும்
பற்றிப் படர்கின்ற காளானை?

கவனியுங்கள்
நாம் ஏதாவது செய்தாக வேண்டும்
காளான் குடைநிழலில்
சித்தாந்தங்களை திறந்து வைத்தபடி
செபித்துக் கொண்டிராமல்
செயல்முறையில் ஏதும் முனைந்தாக வேண்டும்
சின்ன விழிகளுக்குள் இன்னும்
மீதமாயிருக்கின்ற கனவுகளையேனும்
மெய்ப்படுத்தித் தருவதற்கு
அதுவும் விழியளாவும் இடமெல்லாம்
வெள்ளெருக்குப் பூ த்துப்படர்வதன் முன்பாக .

12 - 09 - 1996.

# விசேட கவனத்திற்குரிய மாணவர்களின் கற்றற்செயற்பாட்டை மேம்படுத்தல்

த.விவேகானந்தன் B.A (Hons.) Dip. in. Edu.
அதிபர்
மட்/வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயம்

பாடசாலைகளில் பல்வேறு சமூக மட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியைப் பெறுகின்றார்கள். இம் மாணவர்கள் எல்லோரும் உடலியல், உளவியல் ரீதியாக ஆரோக்கியம் உள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். எனவே இவ்வாறான உடலியல், உளவியல் ரீதியாக கற்றல் செயற்பாட்டில் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்ற மாணவர்களை வகுப்பறைகளில் நாம் காணலாம். இம் மாணவர்களையே விசேட கவனத்திற்குரிய மாணவர்கள் எனக் குறிப்பிடுகிறோம். இக்கட்டுரையில் உடலியல் ரீதியான குறைபாடுகளைக் கொண்ட மாணவர்கள் பற்றியே ஆராயப்படுகின்றது. இவ்வகையில் பேச்சுக் குறைபாடுகள் உள்ளோர், பார்வைக் குறைபாடுகள் உள்ளோர், காது கேட்பதில் குறைபாடுகள் உள்ளோர் என்போரைக் குறிப்பிடலாம்.

இத்தகைய குறைபாடுகள் உள்ள மாணவர்கள் எப்போதும் வகுப்பறைகளில் வீணாகவே காலத்தைக் கழிக்கின்றவர்களாகக் காணப்படுகின்றனர். இம் மாணவர்களை அடையாளம் காண்பதும் அவர்களது கற்றல் செயற்பாட்டை எவ்வகையில் மேம்படுத்தலாம் என்பதும் இக்கட்டுரையின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. எனவே இத்தகைய மாணவர்கள் விடயத்தில் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் பொறுப்புமிக்கவர்களாக இருப்பது அவசியமானதாகும்.

எமது நாட்டில் மேற்படி குறைபாடுகளுடனான பிள்ளைகளை அடையாளம் காணத் தவறியமையும் அவர்களது கல்வியை மேம்படுத்த ஆக்கபூர்வமான பரிகாரங்களை வகுப்பறைகளில் ஆசிரியர்கள் கைக்கொள்ளாமையும் ஆரம்ப வகுப்புகளில் முப்பது வீதமானோர் பாடசாலையை விட்டு வெளியேறக் காரணமாகும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே இவ்வாறான மாணவர்கள் விடயத்தில் ஆசிரியர்கள் அக்கறையுடையவர்களாய் இருப்பது அவசியமானதாகும்.

சாதாரண வகுப்பறைகளில் உதவிசெய்ய இயலாத குருடர், செவிடர், ஊமையர் போன்றோரை மாத்திரம் அவர்களுக்குரிய விசேட பாடசாலைகளுக்கு அனுப்ப உதவமுடியும். ஆனால் நாம் முன்னரே குறிப்பிட்ட சிறு உடற் குறைபாடுகள் உள்ளவர்களை வகுப்பறைகளில் இனம்காண முடியுமாயிருக்கும்.

பேச்சுக் குறைபாடுள்ளவர்களை புத்தகங்களை வாசிக்க வைக்கும்போதும் மற்றவர்களுடன் கதைத்தல் ஆசிரியருடன் உரையாடல் போன்ற சந்தர்ப்பங்களின் போதும் நன்கு அவதானிக்க முடியுமாயிருக்கும்.

இத்தகைய பேச்சுக்குறைபாடுகள் உள்ளவர்கள் கொன்னையாகப் பேசுபவர்களாயிருப்பர். உரத்துப் பேசமுடியாதவர்களாய் இருப்பர். சில சொற்களை உச்சரிக்க இயலாதவர்களாய் இருப்பர். இத்தகைய தன்மையுள்ளவர்கள் மனமுறிவு, கவலை, துக்கம் போன்ற உணர்வுகளுக்கு உட்பட்டு கற்றலில் பின்தங்கிவிடுவார்கள்.

இத்தகையோர்களை அவதானித்து அவர்களுக்கு உதவுதல் மிக அவசியமாகும். உதாரணமாக உச்சரிப்புப் பிழை உள்ள மாணவர்களை இனம் கண்டு எத்தகைய உச்சரிப்புப் பிழை அவர்களிடம் உண்டு என்பதனை அறிந்து அதற்கு உதவலாம்.

ஆசிரியர் மட்டுமன்றி பெற்றோரும் இதில் அக்கறை செலுத்துதல் நல்ல பலன் தரும். மேலும் பிழையற உச்சரிக்கக் கற்பிப்பதுடன் பிழையற்ற ஒலியை மாணவன் கேட்கச் செய்வதும் பொருத்தமாகும். தவிர மிகமுக்கியமாக ஆசிரியர்கள் அப்பிள்ளையின் மேல் அன்பு,தயவு,இரக்கம் உற்சாகம் என்பனவற்றைத் தாராளமாக வழங்கி அவர்களுக்கு நல்ல கணிப்புகள் வழங்கி உற்சாகப்படுத்துதல் நல்ல பயன் தரும்.

காது கேட்காத குறைபாடுள்ள மாணவர்களை மிக அவதானத்துடன் இருப்பதன் மூலமே கண்டுகொள்ள முடியும். மாணவன் தன் குறைபாட்டைக் கூறமுடியாதவனாய்இருப்பான். அக்கறையற்றவன் போல் மாணவன் காணப்படுதல் ஆசிரியரது வாயசைவுகளையே கவனித்திருத்தல், சொல்லும் விடயங்களைக் கிரகிக்க கஸ்டமுறுதல் போன்றவற்றை மாணவரிடம் அவதானிப்பதன் மூலம் இத்தகைய மாணவர்களை இனங்காணலாம்.

இத்தகைய மாணவர்களை அடையாளம் கண்ட பின்னர் அவர்களை முன்வரிசையில் அமரச் செய்வது நல்ல பயன்தரும். தவிரவும் ஆசிரியரது வாய்நன்றாகத் தெரியத்தக்க இடத்தில் மாணவரை அமரச்செய்தலும் தகுந்த பரிகாரமாக அமையும். அத்துடன் ஆசிரியர் தனது வாய் அசைவு, உதடசைவுகளை அவதானிக்கச் செய்து அதற்கேற்ப மாணவன் செயற்படுவதற்கு ஊக்குவித்தலும் சிறந்ததாக அமையும். மேலும் செவிப்புல உபகரணங்களைப் பாவிப்பதற்கு மாணவனை வழிப்படுத்தலும் நல்ல முறையாகும். அத்தோடு காதை அடிக்கடி சுத்தப்படுத்துவதற்கும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் நல்ல ஆலோசனைகள் வழங்கவேண்டியது ஆசிரியரது பங்கெனக்குறிப்பிடுவது பொருந்தும்.

பார்வைக்குறைபாடுள்ள மாணவர் விடயத்தில் ஆசிரியர் அக்கறையுடையவராக இருப்பது மிக அவசியம். பார்வைக்குறைபாடானது காலப்போக்கில் மாணவருக்கு நோயைக்கூடக் கொண்டுவந்து விடலாம். இத்தகைய குறைபாடுள்ள மாணவர்கள் பாடங்களில் ஆர்வமின்மையுடையோராய் இருப்பர். மாணவர்களைப் பேட்டிகாண்பதன்மூலம் கண்ணில் நீர்வடிதல் போன்ற மற்றவரை நச்சரித்துக் கொண்டிருப்பர். என்பதனைப் பரீட்சிப்பதன்மூலம் தகுந்த பரிகாரங்களை மேற்கொள்ளலாம். எத்தகைய பார்வைக்குறைபாடு என்பதனை இனம் கண்டுகொள்வதன்மூலம் வகுப்பறைகளில் கரும்பலகையில் எழுதுவதனை சிரமப்பட்டு வாசிப்பர். பல பக்கமும் சாய்ந்து பார்ப்பார்கள். கரும்பலகையில் எழுதியுள்ளவற்றை வாசியாது மாணவர்களை இருக்கச்செய்வது நல்லதொரு பரிகாரச் செயல்முறையாக அமையும். இத்தகையோரை அவதானித்து இனங்கண்டு அவர்களுக்கு பார்வைக்குறைபாடு உண்டா கண்சம்பந்தமான குறைபாடுகள் இருப்பின் வைத்தியரொருவரை கலந்து ஆலொசிக்க வழி காட்டமுடியும். மேலும் கரும்பலகையை போதுமான ஒளியுள்ள இடத்தில் வைப்பதன்மூலமும் அதிகளவு ஒளியுள்ள இடத்தில் வகுப்பறையை ஒழுங்குபடுத்தாது இருப்பதும் ஆசிரியர் தெரிந்துவைத்திருக்கக்கூடிய பரிகார முறையாக அமையும். மேலும் தேவையேற்படின் மூக்குக்கண்ணாடி அணிவதற்கு அவர்களை வழிப்படுத்தலாம்.

எனவே இத்தகைய உடலியர் பிரச்சினைகளாலும் பார்வைக்குறைபாடு, பேச்சுக்குறைபாடு, கேட்டல் குறைபாடு என்பன மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை பின்தள்ளுகின்றன. இதனால் பாடசாலையை விட்டு நீங்கிவிட இவ்விடயங்கள் அவர்களை ஊக்கப்படுத்துகின்றன. மேலும் மற்றைய மாணவர்களைப் போன்று தாமில்லை என்னும் தாழ்வுமனப்பான்மைக்கு உட்படுவதன் மூலம் அவர்களது உளவளர்ச்சியும் தடைப்படுகின்றது. திறமையுடையவர்களாய் இருந்த போதும் தாழ்வு மனப்பாண்மையால் நடைப்பிணங்களாய்ப் போய்விடுகின்றனர்.

இது தவிர அவர்களுக்கு ஏற்படும் மனமுறிவுகள் அவர்களை வேண்டத்தகாத நடவடிக்கைகளுக்கும் உட்படுத்திவிட ஏதுவாகின்றன. இதனால் ஆசிரியர்களாகிய நாம் இத்தகைய மாணவர்கள் விடயத்தில் அவதானமுடையவர்களாய் இருந்து அவர்களை நல்வழிப்படுத்துதல் அவசியமானதாகும்.

# தனியார் ரியூசன் கல்வி

கே. எஸ். கஜேந்திரன் B.B.A (Hons.)

கணக்காய்வுப் பரீட்சகர்

கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம்

## அறிமுகம்.

அறியும் ஆற்றலை அடைய வைப்பது கல்வி, மாக்களை மக்களாக உருவகப்படுத்தி பகுத்தறிவை வழங்குவது கல்வி. கல்வி புகட்டலின் நோக்கம் விடயம் ஒன்றினை விளங்கிக்கொள்ளக்கூடிய வினையாற்றலை வழங்குவதாகும். எந்த கல்விமுறையினதும் அடிப்படை நோக்கம் இதுவேயாகும்.

குருகுலக்கல்வியாக இருந்த எமது கல்விமுறை பல்வேறு மாற்றங்களின் பின் தற்போது தனியார் ரியூசன் முறைக்கல்வியாக மாறியிருக்கின்றது. தேசிய கல்வி ஆணைக்குழு பொதுக்கல்விசம்பந்தமான தேசிய நலன்களை அடைந்து கொள்வதற்கு தேவையான அடிப்படைத்திறன்கள் ஐந்தை இனங்கண்டுள்ளது.

01. தொடர்பு கொள்ளல் திறன்கள் தொடர்பு கொள்ளல்திறன் மூன்று உபபகுதியாக வகுக்கப்படுகிறது

1. எழுத்தறிவு

2. எண்ணறிவு

3. விளக்கக்கணிப்பு

02. சூழல் சம்பந்தமான திறன்கள்

சூழல் சம்பந்தமான திறன்கள் மூன்று உபபகுதியாக வகுக்கப்படுகிறது.

1. சமூகச்சூழல்

2. உயிரியல் சூழல்

3. பௌதீகச்சூழல்

03. ஒழுக்கம், சமயம் என்பவை சம்பந்தமான திறன்கள் விழுமியங்கள், மனப்பாங்குகள்

04. விளையாட்டு, ஓய்வு நேரபயன்பாடு சம்பந்தமான திறன்கள் உடற்பயிற்சி, விளையாட்டு, சந்தோசக்களிப்பு, ஓய்வுநேர நடவடிக்கைகள் என்பனவற்றின் மீதான செயல்தூண்டுதல்கள்.

05. பயில்வதற்கு பயிலல் சம்பந்தமான திறன்கள். மாற்றமடைந்துவரும் உலக இயல்பிற்கு ஏற்றவாறு மாறுதல். மேற்கூறிய அடிப்படைத்திறன்களை அடையக்கூடிய வகையில் பாடசாலைச்சூழல் உருவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலைச் சூழலிலே அதிபர், ஆசிரியர்கள்குழாம், பாடவிதானங்களின் படிநிலைகள், பாடசாலை ஒழுங்குவிதிகள் என்ற சகல விடயங்களும் மேற்கூறிய அடிப்படைத்திறன்களை கருத்தில் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன.

தனிநபர் ஒருவரின் கல்விமுயற்சி உயர்கல்வியையும் வேலைவாய்ப்பையும் நோக்கமாக கொண்டிருக்கும். கல்வி பெறுவதற்கான இறுதி இலக்கு இதுவாகவே அமையும்.

கல்வியின் தேசிய நலன்களை அடைவதிலும் தனிநபர் ஒருவரின் நோக்கங்களை அடைவதிலும் தனியார் ரியூசன் அமைப்புகள் எவ்வகையான தாக்கங்களை செலுத்தலாம் என்பதனை இக்கட்டுரை சிறிய அளவில் ஆராய முற்படுகிறது.

தனியார் ரியூசன்களின் தோற்றம்.

60பதுகளின் பின்பகுதியிலும் 70களின் ஆரம்பப்பகுதியிலும் பாடசாலைக் கற்பித்தலின் விளக்கம் குறைவான பகுதியை, பிறிதொருவரிடம் கேட்டு தெரிந்து கொள்ளும் முறை இருந்துவந்தது. பின்னர் மாணவர்கள், குழுவாக சேர்ந்து விளக்கம் குறைவான பகுதியை கேட்டு தெரிந்து கொள்ளும்முறை உருவானது.

குழுவாக சேர்ந்த மாணவர்களோ அல்லது தனியான மாணவர்களோ விளக்கம் சொல்பவருக்கு கட்டணங்களை செலுத்தும் வழமை ஒன்று பின்னர் உருவாகிவந்தது.

70பதுகளின் நடுப்பகுதியில் மேற்கூறிய முறைகள் கட்டணங்களை செலுத்தி கற்றுகொள்ளும் நிறுவனஅமைப்பிலான தனியார் ரியூசன்களாக உருவாகின.

1980ல் யாழ்ப்பாண தீபகற்பம் சம்பந்தமான ஆய்வினை நடாத்திய திரு. பரராஜசிங்கம் என்பவர் தனது ஆய்வில் யாழ்ப்பாணத்தில் 39 தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கியதாகக் குறிப்பிடுகின்றார். இவை நிலையம் (Center), அக்கடமி (Acadamy), ரியூட்டறி (Tutory) டியூட்டோரியல் கொலிச் (Tutorial College), மண்டபம் (Hall), நிறுவனம் (Institute) என்ற பெயர்களில் அழைக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார். இவற்றில் சில, பாடசாலைகளுக்கு இணையான வகுப்புகளை நடாத்துவனவாகவும் இருந்து வந்தன.

இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள், ஆரம்பத்தில் தனி ஒருவருக்கு பாடங்களை நடாத்தி விளக்கமளிப்பவராக இருந்து, பலருக்கும் தனித்தனி இடங்களில் பாடம் நடாத்துபவராக பிரபலமாகி, தனியார் ரியூசன் ஆசிரியராக மாறி விடுகின்றனர். ஒரு மாவட்டம் முழுவதும் காலை, மதியம், மாலை என ஒரு மாவட்டம் முழுவதும் காலை, மதியம், மாலை என ஓடித்திரிந்து ரியூசன் கொடுப்பவராக குறித்த மாறியிருப்பின் அவர் உயர்நிலையில் வைத்துக் கணிக்கப்படுகிறார்.

பிரபலமாகி உயர் நிலையில் இருப்பவர் ஒருவர் பல மாவட்டங்களுக்கும் சென்று கற்பிக்கக்கூடிய நிலைக்கும் மாறியுள்ளார். அநேகமாக இவர் "உயர் பெறுபேற்றுக்கு உத்தரவாதம்" என்ற விளம்பர வாசகத்தினூடு மாணவர்களைக் கவர்ந்திழுக்க முற்படுகிறார்.

தனியார் ரியூசன்களின் அமைப்பு

பாடசாலைக்கல்விக்கு இணையான வகையில் சகல ஆண்டுகளுக்கும் ரியூசன்கள் இருந்தாலும் பிரதானமான 3 பரீட்சைகளை நோக்கியே இவை அமைந்துள்ளன.

1. ஐந்தாம் ஆண்டுப்புலமைப்பரிசில் பரீட்சை

2. க.பொ.த (சாதாரண) பரீட்சை

3. க.பொ.த (உயர்தர) பரீட்சை

என்பவையே இவையாகும். ஒருவனது கல்வி வாழ்க்கையில் எதிர்கொள்ள வேண்டிய பிரதான பரீட்சைகள் இவை என்பதால் இவற்றினை நோக்கியவாறு ரியூசன்கள் அமைகின்றன.

ஆசிரியர் ஒருவரிடம் தனியாகக் கற்றல் (Private Class), சிறு குழுவாகக் கற்றல் (Group Class), நிறுவன அமைப்பிலான ரியூசன் (Institute) என்ற மூன்று வகையிலான ரியூசன்கள் வழமையில் காணப்படுகின்றன.

தனியாகக் கற்றல், சிறு குழுவாகக் கற்றல் என்பவை பொருளாதாரத்தில் உயர் வகுப்பை சேர்ந்தவர்களால் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

நிறுவன அமைப்பிலான ரியூசன் முறையே மலிவான செலவு குறைந்த முறைகளாதலால் அனைவராலும் பயன்படுத்தப்படுகின்றது.

பெரும்பாலானவை பாடசாலை நேரம் தவிர்ந்த பாடசாலை நாட்களின் காலை, மாலை வேளையிலும் வார இறுதியின் முழுநாளிலும் போயா விடுமுறை தினங்களிலும் நடைபெறுகின்றன.

தனியார் ரியூசன்களின் கல்விப் போதனாமுறைகள்

பெரும்பாலும், பாடசாலைகளில் பாடங்கள் ஆரம்பிக்கப்படும் முன்னரேயே ரியூசன் வகுப்புக்களில் குறித்த பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டு விடுகின்றன. பாடங்கள் தொடர்பான முக்கிய குறிப்புகள் தட்டச்சு றோனியோ பிரதிகளாகவோ அல்லது அச்சிடப்பட்ட பிரதிகளாகவோ வழங்கப்பட்டு கட்டணங்களும் பெறப்படுகின்றது.

பாடங்களின் ஒவ்வொரு அலகும் பூர்த்தியாகும் பொழுது கடந்தகாலப்பரீட்சை வினாக்கள் கொடுக்கப்பட்டு விடைகள் எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பது சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. பின்னர் ஒவ்வொரு அலகிலும் "பரீட்சைக்கு வருமென எதிர்பார்க்கப்படும் வினாக்கள்", மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு பரீட்சை இடம்பெறுகிறது. இறுதிப் பரீட்சை நெருங்கும் காலங்களில் கேள்வி வகுப்புகள் (Paper Class) என்ற பாணியிலான வகுப்புகள் நடைபெறுகிறது.

குறித்த ஒரு பாட அலகின் அடிப்படையை ஆழமாக கற்பித்தலில் நேரத்தை செலவிடுவதைவிட குறித்த அலகில் எந்த எந்த கோணங்களில் இருந்து எவ்வாறான கேள்விகள் கேட்கப்படலாம் என்பதிலேயே கண்ணும் கருத்தும் செயற்படுகிறது.

பரீட்சையை நெருங்கும் காலங்களில் பாடத்திட்டம் முடிக்கப்படாதிருப்பின் முடிக்கப்படாத பாடங்கள் படிப்பிக்கப்படாமல் அந்த பகுதியில் வரக்கூடிய கேள்விகளும் விடைகளும் மட்டும் வழங்கப்படுகின்றன. எனவே கல்விப் போதனைகள் பரீட்சைக்கேள்விகளை நோக்கமாக கொண்டே நடைபெறுகிறதெனலாம்.

ரியூசன் கல்விக்கான காரணங்கள்

பாடசாலைக்கல்வியமைப்பில் இருந்துவரும் பிரதான தடைதாண்டுதல்களாக 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா.த) ப்பரீட்சை, க.பொ.த (உ.த) ப்பரீட்சை என்பவற்றைக்குறிப்பிடலாம். இவ் ஒவ்வொரு பரீட்சையும் பின்வரும் நோக்கங்களை கொண்டதாகும்.

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

1. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவன் தனது புள்ளிகளுக்கேற்றவாறான பிரபலபாடசாலையில் சேர்ந்து கொள்ளமுடியும்.

2. புலமைப்பரிசிலுக்காக வழங்கப்படும் பணத்தை பெற்றுக்கொள்ளல்

3. தமது பிள்ளையின் பெயரால் பெற்றோர் சமூகத்தில் தமது அந்தஸ்தை உயர்த்திக்கொள்ளல்

க.பொ.த (சா.த) பரீட்சை:

1. க.பொ.த உயர்தரத்தில் சிறந்ததென தன்னால் கருதப்படும் பாடநெறியை தெரிவுசெய்தல்

2. க.பொ.த உயர்தரத்திற்கு சிறந்த பாடசாலையை தெரிவு செய்தல்

3. தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளல்

4. தொழில்சார் கல்விக்கான தகைமையை பெறல்

5. சமூகத்தில் அந்தஸ்தை பேணிக்கொள்ளல்

க.பொ.த (உ.த) பரீட்சை:

1. பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக்கொள்ளல்

2. தொழில் வாய்ப்பை பெறுதல்

3. தொழில்சார் கல்விக்கான தகைமையை பெறுதல்

4. சமூக அந்தஸ்தை பேணிக்கொள்ளல்

மேற்படி ஒவ்வொரு பரீட்சைக்குமான நோக்கங்களை இரண்டு வகையினில் அடக்கலாம்.

1. தொடரும் கல்விக்கான போட்டி
2. தொழிலுக்கான போட்டி


தொடரும் கல்விக்கான வாய்ப்புகள் அல்லது கிடைக்கும் ஆசனங்கள் குறைவாக உள்ள நிலையில் தகைமைபெற்றோர் தொகை கூடுதலாக உள்ளது. இச்சமனற்ற நிலையில் உயர்தகைமையைப் பெறுவோனுக்கே ஆசனங்கள் ஒதுக்கப்படுகிறது. எனவே ஒவ்வொரு மாணவனும் தனது சகமாணவர்களுடன் போட்டியிடவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுகிறான்.

தொழிலுக்கான வாய்ப்புகள் குறைவாக உள்ள நிலையில் தொழிலுக்கான கேள்வி (Demand) அதிகரித்துள்ளது. இந்நிலையில் தொழிலில் நுழைவதற்காக உயர்தகைமை என்பது கட்டாயமாகிறது. இதனால் ஆகக்கூடியது எந்த தகைமைக்கு மேல் இருக்கக்கூடாதோ அந்த தகைமைவரை, தொழில்தகமைகள் உயர்த்தப்பட்டுள்ளன. எனவே குறித்த ஒரு தொழிலுக்கான ஆகக்கூடிய உயர்தகைமையை பெற வேண்டிய நிலையில் போட்டியிடவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுகின்றான்.

போட்டியில் வெற்றி என்பது பரீட்சையின் உயர்பெறுபேறுகளே. பரீட்சையின் உயர் பெறுபேறு என்பது "வினாவுக்கு விடையளிக்கும் வினையாற்றலே". இவ்வினாவுக்கு விடையளிக்கும் வினையாற்றலை பெறுவதற்காகவே மாணவன் ஒருவன் ரியூசன் கல்வியை நாடுகின்றான்.

ரியூசன் கல்விபற்றிய மாணவர்களின் எண்ணம்

ரியூசன்களின் ஆரம்ப காலங்களில், ரியூசன் கல்வி பாடசாலைக்கல்விக்கான துணையென மாணவர்களால் கருதப்பட்டது. தற்போது இந்நிலை சிறிது சிறிதாக மாற்றமடைந்து தமது கல்விக்கான பெருமளவு பங்களிப்பு செய்வது ரியூசன்களே என மாணவர்கள் கருதும் நிலை உள்ளது. ரியூசன்களில் கற்போம் பாடசாலைகள் அமைப்பு ரீதியாக இருந்தால் போதும் என்ற நிலை உருவாகி வருகிறது.




கல்விக்கான பங்களிப்பு ஆரம்பகாலங்களில் பாடசாலைகளிடம் மட்டும் இருந்து படிப்படியாக ரியூசன்களின் பங்களிப்பிற்கு மாறிவருவதாக மாணவர்கள் எண்ணுவதை மேலுள்ள வரைபடம் காட்டுகிறது. எதிர்கால மாணவர்கள், தமது கல்விக்கு ரியூசன்கள் மட்டுமே போதும் என்று எண்ணிக்கொள்ளப்போவதை "மாணவர் எண்ண வளையி" எடுத்துக் காட்டுகின்றது.

முடிவுரை:

எமது தற்போதைய கல்விமுறையானது பிள்ளைகள் தமது முழுநேரங்களையும் பரீட்சைகளுக்காக ஒதுக்கி உயர்தகைமைகளை பெறுவதையே நோக்கமாக கொண்டுள்ளது என்பது தெளிவு. எழுத்துப்பரீட்சையில் ஒரு மாணவன் கல்வியின் நோக்கங்கள் சகலதையும் அடைந்துவிடுவதில்லை. கல்வியின் நோக்கமாக கொள்ளப்படும் சகல திறன்களும் எழுத்துப்பரீட்சையில் வெளிப்படப்போவதில்லை.

காலையில் பாடசாலைக்கு செல்லுமுன் ரியூசன், பாடசாலையின் பின் மாலையில் ரியூசன், இரவில் வீட்டு வேலைக்கான பாடங்களை பூர்த்தி செய்தல் இவ்வாறாக நாளின் முழுநேரமும் கல்விக்கே செலவிடப்படுகிறது.

விளையாட்டுக்கான நேரம், உடற்பயிற்சிக்கான நேரம், சமூக சூழலுடன் இணைதலுக்கான நேரம், சந்தோசக்களிப்புக்கான ஓய்வு நேரம் என்பனவெல்லாம் அவர்களால் அறியப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

மாணவன் ஒருவன், பாடம் ஒன்றின் அடிப்படைவிடயங்கள் ஆழமாக சரியான முறையில் கற்பானேயானால் எந்தவொரு வினாவுக்கும் விடையளிக்கக்கூடிய சுய ஆற்றலை பெறுகிறான். ஆனால் ரியூசன் கல்வியானது சொல்வதை கேட்கும் மாணவன் அதனை மீள சொல்லும் சமுதாயத்தையே உருவாக்கியிருக்கிறது. சுயமான சிந்தனை என்பதை மாற்றி "வாயில் ஊட்டிவிடும்" முறையை உருவாக்கியிருக்கிறது.

இதனால் மாணவன் ஒருவன் எதிர்காலத்தில் வகிக்கக்கூடிய உயர்பதவிகளில் திட்டமிடல், தீர்மானம் செய்தல் போன்ற சுயமான முகாமைத்தீர்மானங்கள் எடுக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத்தள்ளப்பட்டுவிடுகின்றான். மொத்தத்தில் ரியூசன் கல்வியானது பரீட்சையில் வெற்றி என்ற மாயையில் கவர்கிறதேயன்றி கல்வியின் நோக்கங்களை முழுமையாக அடைவதில் மாணவனை தோல்வியுற செய்து விடுகிறது.

தீர்வுகள்:

ஞாயிற்றுக்கிழமைகளிலும் போயாதினங்களிலும் ரியூசன் வகுப்புகளை தடைசெய்வதற்கான முயற்சிகள் அண்மைக்காலமாக நடைபெற்று வருகின்றது. ரியூசன் வகுப்புகளை சட்டத்தால் தடைசெய்வதைவிட ரியூசன் இயங்குவதற்கான அடிப்படைக்காரணங்களை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதனூடு ரியூசன்களுக்கான தேவையை இல்லாதொழிக்க விரிவான ஆய்வுகளுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். பின்வரும் தீர்வுகளை செயற்படுத்தப்படமுடியும்.

1. தற்போதைய கல்வியின் மதிப்பீட்டு முறையாக படித்ததை நினைவுபடுத்தி அதனையே மீள எழுதும் பரீட்சைகளே உள்ளன. இவ்வாறான முறை மாற்றப்பட்டு மாணவர்களின் செயல்திறனை பரீட்சிக்கும் சிறந்த முறை ஒன்று அமுல்படுத்தப்படவேண்டும்.

2. மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு அல்லது மேலதிக உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு பாடசாலை ஆசிரியர்களே உதவக் கூடியவாறு பாடசாலை நேரம் அல்லாத நேரங்களில் பாடங்களை நடாத்துதல்.

3. பாடசாலை ஆசிரியர்கள் மிக உயர்தரத்தில் கற்பிக்க கூடியவாறான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

4. பாடசாலை வகுப்பறைகளில் முழுமையாக கிரகிக்க முடியாதவாறு தடுக்கும் காரணிகளை இனங்கண்டு வகுப்பறைக்கிரகிப்புக்கான தேவையான பூரண வளங்களையும் வழங்கநடவடிக்கை எடுத்தல்.

5. உயர்கல்வி வாய்ப்பிற்கும், தொழில் வாய்ப்பிற்கும் தற்போதைய பரீட்சை முறையில் பெறப்பட்ட புள்ளிகளை மட்டும் கருத்தில்கொண்டு தெரிவு செய்யும் முறையை மாற்றுதல்.

6. உயர்கல்விக்கான புதிய மார்க்கங்களை உருவாக்குதல். மாணவர்கள், ரியூசன்களின் கவர்ச்சியில் மூழ்கி பாடசாலைக்கல்வியை மேலும் மேலும் ஒதுக்கிவிடுவதற்குமுன் கல்விக் கொள்கைவகுப்பாளர்கள். இது சம்பந்தமாக விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு பாடசாலைக்கல்வியை மேலும் சிறப்பாக்க வேண்டும்.

**"மனிதன் மொழியைப் பேசுகிறானில்லை; மொழி என்பதுடன் தன்னைப் பிணைத்துக்கொள்ள முயலும்போதுதான் பேசுகிறான்"**

**– மார்ட்டின் ஹைடெக்கர் –**

# நேர்காணல்

**சுந்தரம் டிவகலாலா**
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

சந்திப்பு
**எம்.ஐ.ஏ. ஜபார்**
ஆசிரியர் – புது ஊற்று

**கே:** ஒரு பாரிய துறை தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் அபிவிருத்தி தொடர்பாக தங்களுக்குள்ள பொறுப்புகள் பற்றி எவ்வகை உணர்வுகளை வெளிப்படுத்த விரும்புகிறீர்கள்?

**ப:** ஆம். இவ்வமைச்சு வடக்கு – கிழக்கு மாகாண சபையின் மிக முக்கியமான அமைச்சு மட்டுமன்றி மிகக் கூடிய ஆளணியைக் கொண்ட அமைச்சுமாகும். அத்துடன் வடக்கு – கிழக்கில் வாழுகின்ற மக்களது மிக முக்கிய மூன்று துறைகள் சம்மந்தமாக தொழிற்படுகின்ற அமைச்சாகும். அதாவது கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை ஆகிய துறைகள் இவ்வமைச்சின் செயற்பாட்டில் அடங்குகின்றன. இம்மூன்று துறைகளும் வடக்கு – கிழக்கில் வாழுகின்ற மக்களது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவிதத்தில் வேண்டியளவு வளர்ச்சியடையவில்லை என்ற யதார்த்த நிலையை இவ்வமைச்சின் பொறுப்பினை ஏற்றபோது நான் புரிந்து கொண்டேன். நான் பெரிதும் விரும்புகின்ற கல்வித்துறையின் பொறுப்பினை வடக்கு – கிழக்கின் கௌரவ ஆளுநர் திரு. காமினி பொன்சேகா அவர்கள் என்னிடம் ஒப்படைத்த போது பெரு விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டேன். இவ்வமைச்சினை என்னிடம் ஒப்படைத்த போது கௌரவ ஆளுநர் அவர்கள் எனக்குக் கூறிய புத்திமதிகளை மிக அவதானமாக கடைப்பிடித்து வருகின்றேன். "வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற ஏழை மக்களது கல்வி வளர்ச்சிக்கு உன்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும்" என அவர் கூறினார். இக்கூற்று எனது பொதுவான இயல்போடு இணைந்திருந்ததினால் நான் பெரிதும் அவரினால் கவரப்பட்டேன். ஆகவே இத்துறை ஒரு பாரிய துறையாக இருந்தபோதும் அவரது வழிகாட்டலின் அடிப்படையில் செயற்படுவேனேயானால் இலகுவாக எனது கடமையை செய்யமுடியும் என கருதுகின்றேன்.

**கே:** இத்துறை தொடர்பாக மாணவர்கள் – ஆசிரியர்கள் – அதிபர்கள் – பெற்றோர்கள் – நிர்வாகிகள் – தொழிற்சங்கங்கள் – அரசியல்வாதிகள் இவர்களிடையேயான சமரசத்தின் சாத்தியப்பாடு பற்றி...

**ப:** இது ஒரு நல்ல கேள்வி. நீங்கள் குறிப்பிட்ட பகுதியாளர் யாவரும் கல்விச் சமூகத்தினர் ஆவர். கல்வித்துறை சிறப்பாக வளரவேண்டுமேயானால் கல்விச் சமூகத்தினரிடையே தெளிவான சிந்தனையும் இலக்கும் அர்ப்பணிப்பும் அவசியமாகும். இவர்களுள் ஒரு பகுதியினரிடம் மட்டும் தொடர்பு கொண்டு நாம் செயல்படுவோமேயானால் கல்வித்துறை வளர்ச்சியடையாது மட்டுமன்றி பாதிப்பும் அடைந்து விடும். அதனால் இத்துறையினர் யாவருடனும் முடிந்தளவு தொடர்புகொண்டு அவர்களிடையே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி செயற்படுவதில் நாம் ஈடுபட்டுள்ளோம். இதில் நாம் அடைகின்ற வெற்றியே எமது வளர்ச்சியை நிர்ணயிக்கும் என்பதை நாம் தெளிவாகப் புரிந்துள்ளோம்.

கே: "கல்வியில் சமவாய்ப்பு" எனும் கருதுகோளின் நடைமுறை அனுபவத்தின் எதிர்மாறான பெறுபேறுகளை எவ்விதம் எதிர்கொள்ளப்போகிறீர்கள்?

ப: நீங்கள் கூறியது போல கல்வியில் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். எமது நாட்டில் வாழுகின்ற குழந்தைகள் யாவருக்கும் கல்வியைப் பெறுகின்ற உரிமையுண்டு. அதை சமமாக வழங்க வேண்டிய கடமைப்பாடு எமக்குண்டு. ஆனால் யதார்த்தநிலையில் இச்சம வாய்ப்பு கிடைக்கப்பெறுவதில்லை என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு தொழிற்பட வேண்டிய நிலையில் எமது அமைச்சு இருக்கின்றது. இதற்காக பல்வேறு அணுகு முறைகளைக் கடைப்பிடிக்க நாம் தொடங்கியுள்ளோம். கல்விச் சமூக அங்கத்தவர்கள் யாவரது ஒத்துழைப்பையும் இத்துறையில் நாம் வேண்டி நிற்கின்றோம்.

கே: கிராமப்புறத்தின் பின்தங்கிய நிலைமைகளை அவதானிக்கும் பொருட்டு திடீர் விஜயங்களை மேற்கொண்டு வருகிறீர்கள். அந்த வகையில் கிராமப்புறத்திற்கு முறையாக வளங்கள் சென்றடைகின்றது என்று நினைக்கின்றீர்களா?

ப: வடக்கு – கிழக்கு மாகாணத்தில் 1949 பாடசாலைகள் உண்டு. இவற்றில் பெரும்பாலான பாடசாலைகள் கிராமப்புறங்களில் இருக்கின்றன. எமது நாட்டின் கிராமப்புறங்களின் சமூக பொருளாதார நிலை ஒரு தனிப்பண்புடையதாகும். பெரும்பாலான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் இருப்பவர்களாகவும் ஏனைய வசதிகள் குறைவாக கிடைக்கப் பெறுபவர்களாகவும் இருக்கின்றனர். இப்பொதுத்தன்மை எமது வடக்கு – கிழக்கிற்கும் பொருத்தமானதாகும். இத்தன்மையினால் இம்மக்கள் எல்லாவகையிலும் பாதிப்படைகின்றனர். அதில் கல்விச்சேவையும் அடங்கும். அதனால் நாம் இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் விசேடகவனம் செலுத்துகின்றோம். அங்குள்ள கல்விப்பிரச்சனைகளைக் கூறுவதாயின் அது மிக விரிவானதாக அமையும். அதனால் சுருக்கமாக நகர்ப்புறப் பாடசாலைகளுக்குக் கிடைக்கின்ற கல்விசார் வளங்கள் இக்கிராமப்புற பாடசாலைகளுக்குக் கிடைப்பதில்லை என்று கூறலாம். இதைக் கூறுகின்றபோது நீங்கள் ஆச்சரியம் அடையக்கூடும். க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு கிராமப்புறங்களில் இருந்து செல்லுகின்ற மாணாக்கர்களில் கணிசமானோர் முதன்மொழி, ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படாத அல்லது தயார்படுத்தாத நிலையில் செல்லுகின்றனர். இந்த நிலையை மிக அவதானமாக எமது அமைச்சு அவதானித்து பரிகாரற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அதற்கு கௌரவ ஆளுநரது பூரண ஒத்துழைப்பும் அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

கே: நகர்ப்புறப் பாடசாலைகளில் வளங்கள் குவிக்கப்படுவதற்கு மேலதிக காரணங்கள் உண்டு என்று நான் நினைக்கவில்லை. இது தொடர்பாகத் தாங்கள் கூறும் கருத்து என்ன?

ப: நகர்ப்புற பாடசாலைகளுக்கு வளங்கள் குவிக்கப்படுகின்றன என்று கூறுவதைவிட கிராமப்புறப் பாடசாலைகளோடு ஒப்பிடுகின்றபோது கூடுதலாக வழங்கப்படுகின்றது எனக் கூறுதல் பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதுகின்றேன். இது தொடர்பாகத் தற்போது நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்று கூறிக் கொள்ளவிரும்புகின்றேன்.

கே: இத்துறையில் தங்களுடனான ஒரு உடன் பயணி என்ற வகையில் தங்களின் நிர்வாகத்தின் கீழ் முன்னேற்றகரமான மாறுதல்களை என்னால் அவதானிக்க முடிகின்றது. அடுத்து வரும் ஆண்டுகளில் கல்வித்துறை தொடர்பாகக் குறிப்பிட்டுக்கூறக்கூடிய ஏதும் திட்டங்கள் உண்டா?

ப: ஆம். கடந்த ஒரு சில மாதங்களாக எமது அமைச்சு கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை சம்பந்தமாக தற்போது நிலவுகின்ற நிலைமைகளை ஆராய்வதில் ஈடுபட்டுள்ளது. இம்மூன்று துறைகளும் துரிதமாக வளர்ச்சியடைய வேண்டுமேயானால் பிரச்சனைகளை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து பரிகாற்று வழிமுறைகளை கண்டறிந்து ஏற்றதொரு திட்டத்தினை வகுக்க வேண்டியது அவசியம். அந்த அடிப்படையில் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இம்மூன்று துறைகளோடும் சம்பந்தப்பட்டவர்களுக்கான பட்டறைகளை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளோம். இப் பட்டறைகளில் இருந்து பெறப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இத்துறைகளுக்கான மூன்றாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளோம். 1997ம் ஆண்டு முற்பகுதியில் இருந்து இம்மூன்று துறைகளும் அத்திட்டத்தின் அடிப்படையில் அணுகப்படும்.

கே: அடுத்து ஒரு முக்கியமான கேள்வி. தொடருகின்ற யுத்த சூழலும் அசாதாரண புலப்பெயர்வும் எமது மாணவர்களின் கல்வியை மிக மூர்க்கத்தனமாகப் பாதித்துவருகின்றன. இந்நிலைமையை எவ்விதம் எதிர்கொள்ளலாமெனக் கருதுகின்றீர்கள்?

ப: உண்மைதான். இதற்கான பரிகாற்று நடவடிக்கைகளும் மேற்கூறிய மூன்றாண்டுத்திட்டத்தில் அடங்கும்.

கே: மழைக்காலம் தொடங்கவிருக்கிறது. புலம்பெயர்ந்த பகுதிகளில் குறிப்பாக வன்னிப்பிரதேசத்திலுள்ள மாணவர்கள் தொடர்பாய் அமைச்சு என்ன திட்டத்தை அமுல்படுத்தவிருக்கிறது?

ப: இவ்விடயம் சம்பந்தமாக ஏற்கனவே நாம் கௌரவ ஆளுநரின் பணிப்பின் பேரில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இடம்பெயர்ந்த மாணவர்கள் ஏறக்குறைய 85000 பேர் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் மேலதிகமாக வந்துள்ளனர். ஏற்கனவே அங்குள்ள பாடசாலைகள் போதிய கட்டிடங்கள் இன்றி காணப்படுகின்றன. அப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்குத் தற்காலிகக் கொட்டகைகளை அமைப்பதற்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு போதுமானதல்ல. ஆகையால் மேலதிக நிதி ஒதுக்கீட்டினை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கே: இலங்கையைப்போன்ற நாடுகளில் கல்விக்கும் வேலைவாய்ப்புக்குமிடையே ஒரு பொருத்தப்பாடின்மை காணப்படுகின்றது. சிறப்பாக வடக்கு–கிழக்கு மாகாணத்தில் இதற்கொரு மாற்று வழிமுறையைத் தோற்றுவிக்கும் தேவைப்பாடு பற்றி...

ப: உண்மைதான். இப்பிரச்சனை நாடளாவிய கல்விக் கொள்கையில் தங்கியுள்ளது. அதனால் எமது மாகாணசபையைப் பொறுத்தவரையில் இதற்கென விசேடமான திட்டம் எதுவும் இதுவரை முன் வைக்கப்படவில்லை.

கே: கடைசியாக, ஒருவகை உறைபனி நிலையிலிருந்து மீழுகிற தன்மையை பண்பாட்டுத்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் காணக்கூடியதாக உள்ளது. தங்களின் வருகையின் பின் (ஏறக்குறைய 06 மாதங்கள்) பண்பாட்டு நிகழ்வுகள், கருத்தரங்குகள், பட்டறைகள், விளையாட்டுத்துறை தொடர்பான வேறு நிகழ்வுகள் என்பன கிரமமாக இடம் பெற்று வருகின்றன. இத்துறைகள் தொடர்பாக மிக ஆழமான ஈடுபாடும் அக்கறையுமுள்ள ஒருவர் என்ற வகையில் இவற்றின் அபிவிருத்திப் பரிமாணம் பற்றி விளக்கிக்கூறுவீர்களா?

ப: நீங்கள் கூறுவதைப்போல் பண்பாட்டு அலுவல்கள் துறையும், விளையாட்டுத்துறையும் உறைபனி நிலையில் இருந்தது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் இவ்விரு துறைகளும் ஒரு நீண்டகாலப்பார்வையைக் கொண்ட திட்டத்தின் அடிப்படையில் செயற்படவில்லை என்பது ஒரு யதார்த்தநிலைதான். நான் மேலே கூறியதுபோல இவ்விரு துறைகளுக்கும் சேர்த்தே மூன்றாண்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது. இவ்விடத்தில் ஒரு விடயத்தைக் கூறுதல் பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதுகின்றேன். எமது இளைஞர்களது விளையாட்டு அபிவிருத்தியில் இரண்டு பகுதியினர் தொடர்புடையவர்கள். அதாவது கல்வித்திணைக்களத்தினரும், விளையாட்டுத்துறை திணைக்களத்தினரும் ஆவர். இவ்விளையாட்டுத்துறை சரியானமுறையிலே வளர்ச்சியடைய வேண்டுமேயானால் நான் குறிப்பிட்ட இவ்விரு துறையினரும் ஒன்று சேர்ந்து ஒரு திட்டத்தின் கீழ் செயற்பட வேண்டும். அதற்கான செயல் வடிவம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக உங்களுடைய கேள்விகளிலிருந்து உங்களின் துறைசார் தெளிந்த சிந்தனையையும், பார்வையையும் என்னால் புரிந்து கொள்ளமுடிகின்றது. இக்கேள்விகள் மூலம் எனது கருத்துக்களையும் அமைச்சின் எதிர்காலத்திட்டங்களையும் வெளியே கொண்டுவர வாய்ப்பளித்ததற்காக உங்களுக்கு என் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

**“குறிப்பிட்ட தத்துவத்தின் தாக்கம் என்பது திட்டவட்டமாக செயற்படும் ஒன்று. ஒரு தத்துவத்தின் அம்சங்களை, தத்துவம் தோன்றி வளர்ந்த காலத்திக்குப் பின் வாழ்பவர் விமர்சிக்கலாம்; நிராகரிக்கலாம். ஆனால் இக்காரணங்களினால் குறிப்பிட்ட அத்தத்துவத்தின் தாக்கத்திலிருந்து அதனைப் பற்றிய விமர்சனங்கள் விடுபட்டிருப்பதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் ஒவ்வொரு தத்துவமும் அதற்குரிய சுட்டுப்பொருளும் (Object) அப்பொருள் பற்றிய விளக்கங்களும் அவற்றை நிர்ணயிக்கும் கோட்பாடுகளும் தத்துவமொழியும் இணைந்து அத்தத்துவத்திற்கான தர்க்கக் கட்டுக்கோப்பின் (Problematic) எல்லைகளை வரையறைத்து செயற்படுகின்றன. இத்தர்க்கக் கட்டுக்கோப்பின் எல்லைகள், அத்தத்துவம் எடுத்துரைப்பவை, எடுத்துரைக்காதவை, வெளிக்காட்டும் அர்த்தங்கள், சாதிக்கும் மௌனங்கள் ஆகிய அனைத்தையும் நிர்ணயிப்பனவாய் விளங்குகின்றன. இத்தர்க்கக் கட்டுக்கோப்பின் எல்லைகளிலிருந்து மீண்டு வந்து வெளிப்பாடு காணும் விமர்சனங்களே புதிய தர்க்கக் கட்டுக்கோப்பினை உருவாக்கவல்லன.”**

**- லூயி அல்தூஸர் -**

